
www.tamilarangam.net

# தமிழ் ஈழம் நாட்டு எல்லைகள்



சே. ஆர். சின்னத்தம்பி

தமிழில்:

திரு. க. சச்சிதானந்தன்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

[illegible] மாந்தர் வெளியீடு : 1

[illegible]

# தமிழ் ஈழம்
# நாட்டு எல்லைகள்

**சே. ஆர். சின்னத்தம்பி**, பி.எச்சி.,
இளைப்பாறிய இணை நிலஅளவை முதல்வர்,
நில அளவைத் திணைக்களம்,
கொழும்பு.

தமிழாக்கம் :

திரு. க. சச்சிதானந்தன்

விற்பனை உரிமை :

காந்தளகம்
12, கோவிந்தன் தெரு,
அய்யாவு குடியிருப்பு,
சென்னை - 600 029.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# நூற்குறிப்பு


நூல் : தமிழ் ஈழம்—நாட்டு எல்லைகள்

ஆக்கியோன் : திரு. சே. ஆர். சின்னத்தம்பி, பீ.எசுசி.

தமிழாக்கம் : திரு. க. சச்சிதானந்தன், பீ.ஏ.

இரண்டாம் பதிப்பு: அக்டோபர், 1983.

அச்சிட்ட படிகள் : 5000

அச்சுப் பதிவு : பாவாணர் அச்சகம்,
116, கலவைத் தெரு,
சிந்தாதிரிப்பேட்டை,
சென்னை-600 002.

விற்பனை உரிமை : காந்தளகம்,
12, கோவிந்தன் தெரு,
அய்யாவு குடியிருப்பு,
சென்னை-600 029.

விலை : உருபா 6-00

Title : THAMIL EEZHAM—
NATTU ELLAIGAL
*(Boundaries of Tamil Eezham)*

Author : *Mr. J. R. Sinnatamby*, B.Sc. (Lond.)

Tamil Script : *Mr. G. Sachithananthan*, B.A.


Copyright : *Mr. J. R. Sinnatamby*, B.Sc. (Lond.)


Second Edition : October, 1983.

Copies Printed : 5000

Printers : *Paavaanar Achagam,*
*116, Kalavai Street,*
*Chintadripet,*
*MADRAS-600 002.*

Distributors : *Kaanthalagam,*
*12, Govindan Street,*
*Ayyavu Colony,*
*MADRAS-600 029.*

Price : Rs. **6-00**


தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

# முதற்பதிப்பின் முன்னுரை

இலங்கைத் தீவிலுள்ள தமிழரின் நிலப் பகுதிகளைப்பற்றியும், தமிழ்மக்கள்பற்றியும் நேரடியாகவோ மறைமுகமாகவோ எடுத்துக் கூறுகின்ற வரலாற்றுக் குறிப்புகளையும் புவியியல் தன்மைகளையும் இந்த நூலில் எடுத்து நோக்குகின்றேன்.

பிரிட்டிசாரின் பழைய குறிப்புகளிலும், ஆட்சி அறிக்கைகளிலும் மலபாரிகள் மாவட்டம் எனக் குறிப்பிடப்பட்டுள்ள இப் பகுதி தான் ஈழத் தமிழர் நாடாகும். மலபாரிகள் என்னும் சொல் இங்குத் தமிழரையே குறிக்கிறது.

தென் இந்தியா மட்டுமன்று, வட இந்தியாவும் திராவிடரின் நிலப்பகுதியே என யாரும் அறிவதில்லை. நகர்சார் நாகரிகம் அறியா நாடோடிகளான ஆரியர், கி.மு. 1500 அளவில் வட இந்தியாவிற்குப் படையெடுத்து வந்தவர். அக்காலத்தில் மிக முன்னேறிய நகர்சார் நாகரிக மக்களாகத் திராவிடர் விளங்கினர். இந்தியத் துணைக்கண்டம் முழுவதும் திராவிடர் பரந்திருந்தனர். இப்பொழுது திராவிடக் கிளைமொழிகள் இந்தியா முழுவதும் இல்லையெனினும், எசு. கே. சட்டர்சி குறிப்பிடுவதுபோல் இந்தியப் பண்பாடு நூற்றுக்கு நூறு விழுக்காடு ஆரியப்பண்பு அற்றதே.

கி.மு.1500 அளவில் இந்தோ-ஆரியர்களின் குடியேற்றத்தினால் கங்கை, யமுனை, பஞ்சாபிப் பரப்புகளில் இந்தோ-ஆரிய மொழிகள் திராவிடர்மீது திணிக்கப்பட்டன.

இலங்கைக்கும் தென் இந்தியாவிற்கும் நெருங்கிய கலாசார, சமய, சமூக, மாந்த உறவுகள் உண்டு எனச் சி.சி.மெண்டிசு, சி.பி. மலலசேகர, எசு. பரணவிதான, ரால்ப் பிரீசு வில்கெலிம்,கெயிகர் ஆகியோர் கூறியுள்ளனர். வடமொழி, பாலி, தமிழ் ஆகிய மொழிகளில் உள்ள இலக்கியங்களில் இதற்கான சான்றுகளைக் காணலாம். கி.பி. 16ஆம் நூற்றாண்டில் மேலைநாட்டார் இந்தியாவுக்கும் இலங்கைக்கும் வந்த பின்புதான் இந்த நெருங்கிய தொடர்பு துண்டிக்கப்பட்டது. இந்த நெருங்கிய உறவால், இலங்கையில் அயலவர்களாக வாழ்ந்து ஆதரவுபெற்ற இந்து சமயத்துக்கும் புத்த சமயத்துக்கும் வளமான ஆக்கங்கள் கிடைத்துள்ளன.

இலங்கையைப்பற்றிச் சிறப்பாகவும், இந்தியாவைப்பற்றிப் பொதுவாகவும் நான் வரலாற்றையும் புவியியலையும் படிப்பதற்குக் காரணம், இலங்கையின் புவியியல்பற்றித் தாலமி ஆக்கியவற்றை ஆராய்ந்தமையே. கி.பி. 140-ல் அப்பொழுது அறியப்பட்டிருந்த உலகின் வரைபடத்தைக் கிரேக்க-எகிப்தியப் புவியியலாளரான தாலமி வரைந்தார். இதைப்பற்றிய ஆராய்ச்சியின் விளைவாகத் தாலமியின் புவியியலில் இலங்கை என்னும் நூலைத் தயாரித்து ஆங்கிலத்தில் வெளியிட்டேன். அதிலுள்ள சில கருத்துக்களை இந்த நூலிலும் தந்துள்ளேன்.

தாலமி, இலங்கைப் புவியியலைத் தயாரிக்கையில் தமிழ்மொழியைப் பயன்படுத்தியுள்ளார் என நான் கண்டேன். கி.பி. 100-ல் தமிழ்மொழியில் உள்ள கருத்துகள் இத்தாலியை வந்தடைந்தன எனப் பிரஞ்சுக் கல்லூரியின், இந்திய மொழியியல் பேராசிரியர் சீன் பிலியோசா கூறியுள்ளமை, எனது இக் கருத்துக்கு வலியூட்டுகிறது.

தாலமியின் புவியியலில் இலங்கை என்னும் நூலைத் தயாரிப்பதற்குப் பிரிட்டிசு அரும்பொருட் காப்பகம், அமெரிக்க நூலகக் காங்கிரசு வாசிங்டன், லேடன் பல்கலைக்கழகம் ஆகியன உதவின. பிரிட்டிசு றோயல் ஏசியாட்டிக் கழகத்தாரின் வெளியீடுகளும் எனக்கு உதவின.

பிரிட்டிசு றோயல் ஏசியாட்டிக் கழகத்தின் இலங்கைக் கிளையைத் தொடங்கச் சர் அலெக்சாண்டர் சோன்சுடனும், வங்காளத்தில் ஆசிய ஆராய்ச்சிகளைத் தொடங்கச் சர் வில்லியம் சோன்சும் முன்னின்று உழைத்தமையை இங்குக் குறிப்பிட வேண்டும். இந்தப் பெருமக்கள் இருவரின் முயற்சியின்றேல், எங்களின் பாரம்பரியப் பண்பாட்டின் வளத்தையும் எங்கள் வரலாற்றுக் காலங்களையும் அறிந்துகொள்ள முடிந்திராது. இப் பெருமக்களின் முன்னோட்ட நோக்கம் போற்றுதற்குரியது.

இந்த நூலின் நோக்கம், இலங்கைத் தீவிலுள்ள தமிழர் தமது சிறப்பியல்புகள், தமது மொழி, தமது பண்பாடுபற்றி அறிந்துகொள்வதுடன், இலங்கைத் தீவிலுள்ள தமது தாயகமான தமிழ் ஈழத்தின் தனியான நிலப்பகுதியின் வரலாற்றுச் சிறப்புடைய எல்லைகளைத் தெரிந்துகொள்ள வேண்டும் என்பதே. இந்த எல்லைகள் சிங்கள நாட்டுடன் ஒரு புறமும் தமிழகத்துடன் மறுபுறமும் உள.

இந்த நூலைத் தமிழாக்கம் செய்த திரு க. சச்சிதானந்தன், இந் நூலாக்கத்திலும் கருத்துகள் கூறிப் பேருதவி செய்துள்ளமைக்கு எனது நன்றியைத் தெரிவித்து முடிக்கிறேன்.

**சே. ஆர். சின்னத்தம்பி**
இளைப்பாறிய
இணை நிலஅளவை முதல்வர்,
நில அளவைத் திணைக்களம்.

கொழும்பு,
18-9-1977.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# உள்ளடக்கம்


1. நிலம் என்னும் நல்லாள் ... 1

தாயான நிலமகள் — நிலத்தின் உரிமை — நிலத்தின் சூழல் — நிலமும் நாடும்—நாட்டினங்கள், நாடுகள்—தமிழ் ஈழ நாட்டினம்.

2. முன்னோர் வழிவழி வாழ்விடம் ... 6

திராவிடச் சின்னங்கள் — எல்லாளன் காலம் — தாலமியும் தமிழர் வாழ்விடமும் — சைவ நாயன்மார் காலம் — சோழர் காலம் — சோழர் காலத்துக்குப் பின் — ஆரியச் சக்கரவர்த்திகள்.

3. மேலைநாட்டவரும் தமிழ் ஈழ நிலங்களும் ... 14

போர்த்துக்கேயர் காலம் — ஒல்லாந்தர் காலம் — றொபெட் நொக்சு — ரேலண்ட் குறிப்புகள் — சுவைட்சர் குறிப்புகள் — ஒல்லாந்தரின் ஆட்சிப் பிரிவுகள் — பிரிட்டிசார் காலம் — அரோசிமித்தின் வரைபடம் — கிளெக்கோர்ண் குறிப்பு — கண்டி அரசின் வீழ்ச்சி — அலெக்சாண்டர் சோன்சுடனின் குறிப்பு — கோல்புறூக் ஆணைக்குழு — சிங்களப் பெரும்பான்மை ஆட்சி.

4. தமிழ் ஈழம் — நாட்டு எல்லைகள் ... 28

கடல் எல்லைகள் — நாட்டு எல்லைகள்.

5. உசாத்துணை ... 35

6. சுட்டி ... 36


## படங்கள்


| | | |
|---|---|---|
| ஒன்று | தாலமியின் இலங்கைத் தீவுப் படம் (கி.பி. 140) | ... 9 |
| இரண்டு | றொபெட் நொக்சின் இலங்கைத் தீவுப் படம் (கி.பி. 1679) | ... 17 |
| மூன்று | ஒல்லாந்தர் கால ஆட்சி மாவட்டங்கள் | ... 19 |
| நான்கு | அரோசிமித்தின் இலங்கைப் படம் | ... 21 |
| ஐந்து | ஒல்லாந்தரின் கரையோரப் பகுதிகளும் கண்டி அரசும் | ... 23 |
| ஆறு | கோல்புறூக் வரைபடம் (கி.பி. 1832) | ... 25 |
| ஏழு | அலெக்சாண்டர் சோன்சுடனின் கையெழுத்துக் குறிப்பு | ... 26 |
| எட்டு | தமிழ் ஈழம் — கடல் எல்லைகள் | ... 31 |
| ஒன்பது | தமிழ் ஈழத்தில் சிங்கள அரசின் திட்டமிட்ட சிங்களக்குடியேற்றம் | ... 34 |
| பத்து | தமிழ் ஈழம்—நாட்டு எல்லைகள் (வண்ணப் படம்) | |


தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

முதலாவது

# நிலம் என்னும் நல்லாள்

உலகம் உருண்டையானது. உலகின் மொத்தப் பரப்பில் மூன்றில் ஒரு பங்கு நிலப் பரப்பு; மூன்றில் இரண்டு பங்கும் நீர்ப் பரப்பே. நிலப்பரப்பையும் நீர்ப்பரப்பையும் சுற்றிலும் வானம் வெளியாக உள்ளது.

வானவெளியிலோ, நீர்ப்பரப்பிலோ, நீருக் குள்ளோ மாந்தன் வாழ்வதில்லை. நிலப் பரப்பில் மட்டுமே அவன் வாழ்கிறான். நிலமே மாந்தனின் வாழ்விடம். உலகின் மொத்தப் பரப்பளவில், மூன்றில் ஒரு பங்குப் பரப்பளவில் மட்டுமே மாந்தன் வாழலாம்.

மாற்றமுடையதாக அமைவதே இயற்கை. நிலமும் மாற்றமுடையதே. எங்கும், எப் பொழுதும் ஒரே சீரானதாக நிலப்பரப்பு அமைவதில்லை.

மேடாக மிதந்தும், பள்ளமாகப் பாய்ந்தும், மலையாக உயர்ந்தும், குன்றாக நிமிர்ந்தும், குகையாகக் குடைந்தும், காடாக அடர்ந்தும், கழனியாகப் பரந்தும், கடும் பாலையாக விரிந் தும், ஒரே வெளியாக விளங்கியும், மண்ணும் நீரும் மயங்கிய சேறாகச் செறிந்தும் நிலம் அமைகின்றது.

இயற்கையோடு இயைந்த வாழ்வு வாழ் கின்ற மக்களுள் தமிழ் மக்கள் தலையாயவர்; நிலத்தின் தன்மைகளையும் இயல்புகளையும் பிரித்தறியக் கூடியவர்கள்.

நிலத்தை ஐந்து வகையாகத் தமிழர்கள் வகைப்படுத்தினார்கள்: மலையும் மலை சார்ந்த நிலமும் குறிஞ்சி; காடும் காடு சார்ந்த நிலமும் முல்லை; வயலும் வயல் சார்ந்த நிலமும் மருதம்; கடலும் கடல் சார்ந்த நில மும் நெய்தல்; இந் நால்வகை நிலமும் ஒன்றுடன் ஒன்று மயங்குகின்றபோதும், கடும் வெய்யிற் கானமாய் அமைகின்ற போதும் உள்ள நிலம் பாலை.

''முல்லையும் குறிஞ்சியும் முறைமையின் திரிந்து
நல்லியல் பிழந்து நடுங்குதுய ருறுத்துப்
பாலை என்பதோர் படிவம் கொள்ளும்''

என்பார் சிலம்பு பாடிய இளங்கோவடிகள்.

அமைப்பில் மட்டுமன்று; தட்பவெப்பத் தாலும் நிலம் வேறுபடுகின்றது. உறைபனிக் குளிரான பனி படர்ந்தன வட-தென்முனை வலையங்கள்; முனைகளை அடுத்துள்ளன குளிர்வலைய நிலப்பகுதிகள்; உலக நடுக் கோட்டினை அடுத்து இரு மருங்கிலும் உள் ளன உலர்வலைய நிலப்பகுதிகள்.

வடமுனையில் உறைபனிக் குளிர்; நடுக் கோட்டினை நோக்கி வரவரக் குளிர் குறை கின்றது. உலக நடுக்கோட்டின் அண்மையில் வெம்மையாக உள்ளது. தெற்கே செல்லச் செல்ல மீண்டும் குளிர்; தென்முனையிலோ உறைபனிக் குளிர்.

வடமுனைக்கு அண்மையில் உறைபனிக் குளிரில் வாழும் எசுக்கிமோ மக்கள்; கடும் பாலையில் வாழும் அரேபிய மக்கள்; குளிர் வலையத்தில் வாழும் ஐரோப்பிய மக்கள்; உலர்வலையத்தில் வாழும் ஆசிய - ஆப்பிரிக்க மக்கள். தட்பவெட்ப வேறுபாடுகளைக் கடந்து மக்கள் வாழ்கின்றமைக்கு இவை சான்று.

www.tamilarangam.net



நிலம் வேறுபட்டு, மாறுபட்டு மயங்கி அமைந்தாலும், உலகின் நிலப்பகுதி எங்கணும் மாந்தன் வாழ்கிறான். மாந்தன் வாழா நிலப் பரப்பு இல்லை எனலாம்.

சில நூற்றாண்டுகளுக்கு முன்புவரை மாந்தனின் கண் படாத நிலப்பரப்புகள் பல வாக இருந்தன. இன்றோ மாந்தனின் ஆட் சிக்கு உட்படாத நிலப்பரப்பு எதுவுமே இல்லை.

## தாயான நிலமகள்

மாந்தனை உலகுக்குத் தந்தவள் நிலமகள். மாந்தன் நிலமகளின் குழந்தை; நிலமகள் மாந்தனின் தாய். மாந்தனின் வாழ்வுக்கும் வளத்துக்கும் நிலமே அடிப்படை; எண்ணங் கட்கும் செயற்பாட்டுக்கும் நிலமே வழி காட்டி.

மாந்தனின் உள்ளத்தில் எழும் எண்ணங் களும் சிந்தனைகளும் அவன் வாழும் நிலத்தின் சூழலை அடிப்படையாகக் கொண்டவை. இதை யொட்டித்தான் வாழ்வின் பல்வேறு இயல்புகளும், பல்வேறு நிலங்கள் சார்ந்த திணைகளாக — வகைகளாக — வகுக்கப் பட்டன. மாந்தனின் அகவாழ்வும் புறவாழ் வும் நிலத்தின் தன்மையனவாகவே அமை கின்றன.

நிலத்திலிருந்தே வாழ்வு கிடைக்கின்றது; இன்பமும் துன்பமும் எழுகின்றன; இடர்ப் பாடுகள் தோன்றுகின்றன; இடர்ப்பாடு களைப் போக்கும் தீர்வுகளும் எழுகின்றன. எண்ணங்கள் கருவுற்று, செயலாக உருப் பெற்று முழுமைபெறும் வாழ்விடம் நிலமே.

வெவ்வேறுபட்ட நிலங்களில் வாழும் மக் கள் வெவ்வேறு இயல்பினராக உள்ளனர். அகன்ற நிலப்பரப்புகளில் வாழ்வோர்க்கும், சிறிய தீவுகளில் வாழ்வோருக்கும் வேறுபாடு உண்டு. கொடிய கானகத்தில் வாழ்வோர்க் கும், பசுஞ் சோலைசூழ் நிலத்தில் வாழ் வோர்க்கும் வேறுபாடுகள் உண்டு. குறிஞ்சி நில மக்கள், மருதநில மக்களைப்போல் அல் லர். வாழ்வில் பொருள் தேடும் முயற்சி யிலும், உணர்வு வளர்ச்சி முறையிலும், அக வாழ்வு இயல்புகளிலும் ஒருவர்க்கொருவர் வேறுபட்டவர்களாக, இவர்கள் உளர்.

உலகிலுள்ள ஒவ்வொரு மாந்தனும் தனக் கென ஒரு நிலத்துண்டு வேண்டும் என விழை கிறான்; அதனைப் பெற்றுத் தனது வாழ்விட மாக்கிக் கொள்கிறான். அந்த நிலத்தின் அடிப்படையில், அந்த வாழ்விடத்தின் செம் மையில் அவன் வாழ்வும் வளம்பெறுகிறது.

## நிலத்தின் உரிமை

இன்றைய உலகில், மாந்தன் சொந்தம் பாராட்டாத — உரிமை கொண்டாடாத— நிலமே இல்லை. உலகின் நிலப்பரப்பின் வரைபடத்தை எடுத்து நோக்கினால் இந்த நிலை நன்கு விளங்கும். உலகில் உள்ள நிலப் பகுதிகள் அனைத்தையும் மாந்தன் பங்கு போட்டு வைத்துள்ளான்.

பெரும்பாலான நிலப்பகுதிகள் தனிமாந் தனின் உரிமைச் சொத்தாக உள்ளன. தனி மாந்தனின் உரிமைச் சொத்தாக இல்லாத நிலப்பகுதிகள், மக்கள் குழுக்களுக்குச் சொந்த மாக உள்ளன; மக்களின் குழுக்கள் அமைத் துள்ள அரசுகட்குச் சொந்தமாக உள்ளன.

இந்தச் சொந்தம், இந்தப் பந்தம், இந்த உரிமை இவற்றின் அடிப்படையில் உலகின் நிலம் முழுவதும் பங்குபோடப்பட்டுள்ளது: எல்லைகள் வகுக்கப்பட்டுள்ளன; ஆட்சி எல்லைகள் வகுக்கப்பட்டுள்ளன.

ஆட்சி எல்லைக்குட்பட்ட நிலப்பகுதிக் குள் வாழ்கின்ற மக்கள், அந்த நிலப்பகுதியின் உரிமையாளர்; அதன் பாதுகாப்பாளர்; நிலத்தைப் பேணுபவர்; நிலத்தின் வளத்தைப் பயன்படுத்துபவர்; நிலத்தின் பயனைத் துய்ப் பவர். அந்த எல்லைக்குட்பட்ட நிலமே அவர்களின் நாடு.

ஒரு நாடு அமைய வேண்டுமானால், அதற் கெனத் தனியானதும், எல்லை வகுத்து அறி யக்கூடியதுமான நிலப்பகுதி வேண்டும். அந்த நிலத்தில் வாழுகின்ற மக்கள், அந்த நிலப் பகுதியைப் பயன்படுத்தி, அங்கு வாழ்கிற ஒவ் வொருவரும் வளமாக — நிறைவாக — வாழ் வின் நோக்கங்களை அமைத்து, அந்த நோக் கங்களை எய்துமாறு அமையவேண்டும்.

காலங்கட்கு ஊடாகப் பார்ப்போ மானால், உலகின் நிலப்பகுதி பல்வேறு முறை

களில் பங்குபோடப்பட்டு வந்துள்ளது. நாட்டின் எல்லைகள் அடிக்கடி மாற்றமடைந்து வந்துள்ளன. சிறிய நாடுகள் பெரிய நாடுகள் ஆயின; பெரிய நிலப்பரப்பைக் கொண்ட நாடுகள் சிறிய நாடுகள் ஆயின.

நாட்டின் நிலப்பரப்பும் எல்லைகளும் நிலையானவை அல்ல; மாறிக்கொண்டிருப்பவை. இவை இயற்கைக் காரணங்களால் மாறுகின்றன; அரசியல் காரணங்களால் மாறுகின்றன; பொருளாதாரக் காரணங்களால் மாறுகின்றன; மாந்தன் இடம்பெயர் இயல்பினாலும் மாற்றமடைகின்றன.

நாட்டின் எல்லைகள் மட்டுமல்ல, நாட்டு மக்களின் தொகுப்பு, அரசியல் அமைப்பு, ஆட்சி இயல்பு என்பனவும் பிறவும் வரலாற்றின் ஊடாக, காலத்தின் ஊடாக அடிக்கடி மாறிக்கொண்டே வந்துள்ளன.

## நிலத்தின் சூழல்

மாந்தனின் உடலியல்புகள், உணர்வியல்புகள், வாழ்வியல்புகள் அனைத்தின் அடிப்படைகளும், அவன் வாழும் நிலத்தைச் சார்ந்தனவாக உள்ளன. மாந்தன் பேசும் மொழி, அவன் மேற்கொள்ளும் தொழில், அவனின் அகவாழ்வு - புறவாழ்வு, அறநெறி என்பன அனைத்தும், அவன் வாழும் நிலம் தரும் சூழலை அடிப்படையாகக் கொண்டு எழுகின்றன.

ஆப்பிரிக்கக் கண்டத்தில் வாழும் கறுப்பு நிறக் காப்பிலி மக்கள், ஐரோப்பாவில் வாழும் வெள்ளை நிறத்தவர், கிழக்காசியாவில் வாழும் சீனர், இந்தியத் துணைக்கண்டத்தில் வாழும் திராவிட மக்கள், அரேபியப் பாலைவனத்தைத் தமதாக்கிக்கொண்ட அரேபிய மக்கள், தென்கிழக்காசிய நாடுகளில் வாழும் மலாய் மக்கள் — இவர்கள் அனைவரும் அந்த அந்த நிலப்பகுதிக்குரியவர்கள்; நிலம் தரும் சூழலுக்கேற்ப எழுந்தவர்கள்; வளர்ந்தவர்கள் — வாழ்கின்றவர்கள்.

உடலமைப்பு, உள்ள அமைப்பு, உணர்வமைப்பு, வாழ்வு, மொழி, பண்பாடு, அறநெறி, தொழில்முறை என்பன அவர்கள் வாழும் நிலத்துக்கு ஏற்றதாய் எழுந்தன. காலங்கட்கு ஊடாக இவர்கள் அந்த அந்த நிலத்துக்குரியவர்களாய் இருந்திருப்பினும் மாந்த வரலாற்றில் அவ்வப்போது நடைபெற்ற மாபெரும் மாந்த இடம்பெயர் முயற்சிகள், போர்ப் படையெடுப்புகள், வணிகத் தொடர்புகள் இக் குழுக்களுக்கிடையே ஓரளவு கலப்பையும் நாகரிக இணைப்பையும் தந்துள்ளன.

கடந்த சில நூற்றாண்டுகளில் நடைபெற்ற இடம்பெயர் முயற்சிகள், குடியேற்ற நடவடிக்கைகள், ஆட்சிவெறிப் போர்கள் என்பன, ஐரோப்பியக் கண்டத்தில் வாழ்ந்த வெள்ளைநிற மக்கள், உலகின் பல்வேறு நிலப் பகுதிகட்குச் செல்லவும், குடியேறவும் புதிய நாடுகளை அமைக்கவும் வழிகோலியுள்ளன.

## நிலமும் நாடும்

நிலங்கட்கேற்ப மக்கள் வேறுபடுவதால் தான் நாடுகள் பலவாக உள. ஆகக் குறைந்த வேறுபாடுகள், ஆகக் கூடிய இணைப்பு, ஒற்றுமை இவற்றைத் தமக்குள்ளே பெற்ற மக்கள் ஒரு நாட்டில் வாழ்கிறார்கள். அந்த நாட்டில் வாழ்கின்ற ஒவ்வொரு மாந்தனும் தனது வாழ்வியல் நோக்கங்களை அமைக்கவும் அந் நோக்கங்களை நிறைவு செய்யும் வழிவகைகளைக் கையாளவும், அதனால் ஒவ்வொரு மாந்தனின் ஆளுமை முழுமைபெறவும், கூடி வாழும் மக்கள் அனைவரும் பயன்பெறவும் நாடு அமைகின்றது.

இனம், மொழி, சமயம், பண்பாடு, வாழ்வுமுறை, தொழில்முயற்சி, வாழ்வியல் நோக்கங்கள் என்பவற்றில் ஒருமித்த ஒருமைப்பாடுடைய மக்களை நாடு கொண்டுள்ளது. இவ் வியல்புகளில், ஒரு நாட்டில் வாழும் மக்களிடையே வேறுபாடுகள் இருப்பின், இவ் வேறுபாடுகளை மாறுபாடின்றிப் போற்றவும் பேணிக் காக்கவும் கூடிய வகையில் ஆட்சி, அரசு அமைத்துள்ள நாடுகளும் உண்டு.

## நாட்டினங்கள், நாடுகள்

கடந்த நான்கைந்து நூற்றாண்டுகளில் உலகெங்கும் நடைபெற்ற அரசியல் படிமுறை வளர்ச்சியின் சிறப்பியல்பே நாட்டினங்களின் எழுச்சியாகும். மக்களாட்சித் தத்துவம் உருப்பெற்று, நடைமுறைப்படுத்துவதற்கு

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



ஏதுவாக அமைந்தது நாட்டினங்களின் எழுச்சியே.

மன்னராட்சிக் காலத்தில், மக்கள் குழுக்களாக வாழ்ந்து தொடர்பற்றிருந்தனர். மக்களாட்சியின் படிமுறை வளர்ச்சிக் காலத்தில் இக் குழுக்கள் ஒன்றோடொன்று தொடர்புகொண்டன. இயைபுடைய குழுக்கள் இணைந்தன; நாட்டினமாக எழுந்தன. அறிவியல் வளர்ச்சி, தொழிற்புரட்சி, பொருளாதார முன்னேற்றம், தத்துவார்த்த வளர்ச்சி என்பன நாட்டினங்கள் எழுவதற்குப் பெரிதும் வழிவகுத்தன.

நாட்டினங்கள் நாடுகளாக எழுந்தன. வரையறுக்கப்பட்ட எல்லைகளைக் கொண்ட நிலப்பகுதியைக் கொண்ட நாடுகள் எழுந்தன. இன்றைய உலகில் உள்ள நாடுகளின் படிமுறை வளர்ச்சியை நோக்குவோர் நாட்டின எழுச்சியை விளங்கிக்கொள்வர்.

ஒரு மொழி பேசி, ஒரு மதம் பேணி, ஒரு பண்பாடு போற்றி வாழ்வியல் நோக்கங்களில் ஒற்றுமைகொண்ட மக்கள் ஒருவர்க்கொருவர் அயலாக வாழக்கூடிய — வரையறுக்கப்பட்ட எல்லைகளையுடைய — நிலப்பகுதியைக் கொண்டு அமைகின்ற மக்களின் தொகுப்பே நாட்டினமாகும்.

யப்பான் என நாம் இன்று அழைக்கும் நாடு, சில நூற்றாண்டுகட்கு முன்புவரை பல குழுக்களாய்ப் பிரிந்து சோகுன்களால் ஆட்சி செய்யப்பட்டது. மக்களாட்சிக் கருத்துகள் வலுவடைய யப்பானிய மொழி, யப்பானியப் பண்பாடு, யப்பானிய வாழ்வுமுறை என்பன மலர்ச்சி பெற்றன. இதனால் இன்றைய யப்பானிய நாடு எழுந்தது. பல குழுக்கள் ஒன்றிணைந்து — பல தீவுகள் ஒன்றிணைந்து ஒரே நாடாக, ஒரே இனமாக, ஒரே ஆட்சி, ஒரே அரசு பெற்று, யப்பானிய நாட்டினமாக முகிழ்த்துள்ளனர்.

பிரஞ்சுப் புரட்சிக்கு முன்பு, பிரஞ்சு மக்கள் நாட்டினமாக எழுச்சியடையவில்லை. பிரஞ்சு மக்களுக்குள்ளே குழுக்கள் இருந்தன. அரசுகள் பல இருந்தன. பிரஞ்சுப் புரட்சியின் விளைவாகப் பிரஞ்சு நாட்டினம் எழுந்தது. வரையறுக்கப்பட்ட எல்லைகளைக் கொண்ட பிரஞ்சு நாடு எழுந்தது.

அரேபியர்கள் மொழியால் ஒற்றுமைப் பட்டவர்கள். அரபுமொழி அவர்களின் தாய் மொழி. அரேபியர் அனைவரும் இசுலாமியர்; பண்பாடு, வாழ்வியல் நோக்கங்கள் என்பவற்றில் ஒருமைப்பாடு உடையவர்கள். எனினும் ஒரே நாட்டினராக அவர்கள் எழுச்சியடையவில்லை. ஒரே நாட்டினமான அவர்கள் பல்வேறு நாடுகளில் வாழ்வதைக் காண்கின்றோம்.

ஐக்கிய அமெரிக்க மாநிலங்களில் வெள்ளை நிறத்தவர், கறுப்பு நிறத்தவர் ஆகிய இரு நாட்டினத்தவர் வாழ்கின்றனர். பண்பாடு, வாழ்க்கைமுறை ஆகியவற்றில் பிரித்தறியக்கூடிய இவ் விரு நாட்டினத்தவரும், பிரித்தறியக் கூடிய நிலப்பகுதியைத் தமதாகக் கொள்ளவில்லை. சொரியலாக — பரவலாக — நாடு முழுதும் இவ் விரு நாட்டினத்தவரும், வாழ்வதால், ஒரே நாடாக — ஒரே நாட்டில் இருவேறு நாட்டினத்தவராக வாழ்கின்றனர்.

பிரிட்டன் அல்லது ஐக்கிய அரசு என அழைக்கப்படும் நாட்டில் நான்கு வெவ்வேறு நாட்டினங்கள் முன்பு வாழ்ந்தன. ஆங்கில நாட்டினம் இங்கிலாந்து என்னும் நிலப் பகுதியிலும், இசுக்கொட்டிசு நாட்டினம் இசுக்கொட்லாந்து என்னும் நிலப்பகுதியிலும், வெல்சு நாட்டினம் வேல்சு என்னும் நிலப்பகுதியிலும், ஐரிசு நாட்டினம் அயர்லாந்து என்னும் நிலப்பகுதியிலும் வாழ்ந்தன. இவை நான்கும் ஒரே நாடாக இணைந்த ஆட்சிக்குட்பட்டிருந்தன.

சில காலத்துக்கு முன்பு ஐரிசு நாட்டினம் அயர்லாந்துக் குடியரசு எனத் தனிநாடாகப் பிரிந்தது. இப்பொழுது இசுக்கொட்டிசு நாட்டினமும், வேல்சு நாட்டினமும் தங்களின் தனித்தனி நிலப்பகுதியைத் தாமே ஆட்சி செய்யும் நாடுகளாகப் பிரிக்க வேண்டும் என்று போராடிக்கொண்டு வருகின்றன.

சேரர், சோழர், பாண்டியர், பல்லவர், ஈழத்தவர் எனப் பிற்காலத்தில் பிரிந்திருந்த தமிழ்மக்கள் மேலைநாட்டினரின் ஆட்சிக்குப் பின் 'நாம் தமிழர்' என்னும் உணர்வுடன் செயற்பட்டு வருகின்றனர். மொழி, பண்பாடு, வாழ்வியல் நோக்கங்களால் தமிழர் தனியான நாட்டினமாக எழுச்சியடைந்துள்ளனர்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

வரையறுக்கப்பட்ட எல்லைகளையுடைய நிலப்பகுதியைத் தமதாகக் கொண்டிருப் பினும் தமிழ்நாட்டினம் தனி நாடு அற்ற நாட்டினமாக உள்ளது. 'வடவேங்கடம் தென் குமரி ஆயிடைத் தமிழ்கூறும் நல்லுலகம்' தமிழினம் வாழும் நிலப்பகுதியாக முகிழ்த்த பின்னரும், மேலைநாட்டினர் ஆட்சிக்குப் பின்னரும், இன்று பரந்த இந்திய அரசின் மாநிலங்களுள் ஒன்றாகவே அமைந்துள்ளது.

## தமிழ் ஈழ நாட்டினம்

இலங்கைத் தீவில் தமிழர்களின் வழிவழி வாழ்விடமான நிலப்பகுதிகள் பிரித்தறியக் கூடிய எல்லைகளைக் கொண்டுள்ளன. இந் நிலப்பகுதிகளில் தமிழர் முப்பது நூற்றாண்டு கட்கு மேலாக வாழ்கின்றனர். ஆட்சி செய்தனர், அரசு அமைத்தனர் என்பதற் குரிய வரலாற்றுச் சான்றுகளுண்டு. எனினும் இன்று, தமிழ் ஈழ நாட்டினமாக முகிழ்த் துள்ள தமிழ் ஈழ மக்கள் தமக்குரிய தனி யான நிலப்பகுதியின் உரிமையாளராக இல்லை. தமிழ் ஈழ நாட்டினத்தின் நிலப் பகுதியான **தமிழ் ஈழம்** இலங்கைத் தீவின் பொதுவான ஆட்சியின்கீழ் — சிங்கள நாட் டினத்தின் பெரும்பான்மை ஆட்சியின்கீழ் உள்ளது.

உலகில் உள்ள நிலப்பகுதியின் மொத்த அளவு மாறாமல் இருக்கின்றது. உலகின் நிலப்பகுதிகள் அனைத்தும் மாந்தனின் ஆட்சிக்கு உட்பட்டிருக்கின்றன. மக்கள் தொகை பெருகவும், மாறாத அளவு நிலப் பகுதி அமையவும், இதனால் வாழக்கூடிய நிலப்பகுதி கிடைப்பது அரிதாகிக்கொண்டே போகிறது. எவ்வளவு நிலப்பகுதியைப் பெற்றுக்கொள்ள முடியுமோ அவ்வளவையும் பெற்றுவிட வேண்டும் என நாட்டினங்கள் கருதும் காலம் தொலைவில் இல்லை. இது மாந்தனுக்குப் புதிய வாழ்வுமுறையைத் தரப் போகின்றது.

இலங்கைத் தீவில் வெவ்வேறான இரு நாட்டினங்கள் வாழ்கின்றன. தமிழ் ஈழ நாட்டினம் ஒன்று; சிங்கள நாட்டினம் மற் றொன்று. இலங்கைத் தீவின் வாழ்விட நிலப் பரப்பு மாறாமல் உள்ளது. ஆனால், வாழ் விட நிலப்பரப்பினைத் தேடும் மக்கள் தொகை பெருகிக்கொண்டு வருகின்றது.

பெரும்பான்மை ஆட்சி அதிகாரத்தின் துணையுடன் சிங்கள நாட்டினம், தமிழ் ஈழ நாட்டினத்தின் நிலப்பகுதியைச் சிறிது சிறிதாகக் கைப்பற்றிக்கொண்டு வருகின்றது. தமிழ் ஈழ நாட்டினமோ, ஆட்சியுரிமை இல் லாத நிலையில், தன் வழிவழி வாழ்விடமான நிலப்பகுதிகளைப் பறிகொடுத்து வருகிறது.

தமிழ் ஈழ நாட்டினத்தினர் பலர் தமக் குரிய நிலப்பகுதிகள் எவையெனச் சரியாகத் தெரியாத நிலையில் உள்ளனர். தமிழ் ஈழ நாட்டினத்திற்கு இலங்கைத் தீவில் தனியான நிலப்பகுதி உண்டு. தமிழ் ஈழ நாட்டினம் இந்தத் தனியான மரபுவழிப் பெற்ற நிலப் பகுதியையும் பறிகொடுத்துவிட்டால், உலகில் வேறு எந்த நிலப்பகுதியையும் உரிமைகோரிப் பெறமுடியாது — சொந்தம் கொண்டாட முடியாது.

உலகில் உள்ள நாடுகள் — நாட்டினங்கள் அமைதியாக வாழ வேண்டுமானால், அவை தத்தம் வழிவழி நிலப்பகுதிகளைப் போற்றிப் பேண, பயன்படுத்த, பாதுகாக்க, ஆட்சி செய்ய உரிமை உடையனவாக இருக்க வேண்டும். ஒவ்வொரு நாட்டினத்தின் அடிப் படை உரிமை இதுவாகும். முன்னர் விரித்துக் கூறியது போல நிலமகள் மாந்தனின் தாயாவாள். நில உரிமையின் அடிப்படையில் மாந்தனின் வாழ்வு முகிழ்க்கிறது.

தமிழ் ஈழ நாட்டினம், தனக்குரிய நிலப் பகுதி எது என்பதை ஐயமறத் தெரிந்து கொள்ள வேண்டும். அந்த நிலப்பகுதி சிங்கள நாட்டினத்தாலோ, உலகின் வேறு எந்த நாட் டினத்தாலோ பறிக்கப்படாமல் பாதுகாக்கப் பட வேண்டும். அப்பொழுதுதான், எந்த நிலம் தமிழ் ஈழக் குடிமகனுக்கு வாழ்வைத் தருகின்றதோ அந்த நிலத்தில் அவன் வாழ வும், பழகவும், பண்பாடு பேணவும், வாழ் வியல் நோக்கங்களை நில உரிமையின் அடிப் படையில் நிறைவு செய்யவும் முடியும்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

இரண்டாவது

# முன்னோர் வழிவழி வாழ்விடம்

பழங்குடிகள் என அழைக்கப்படுபவர், ஒரு குறிப்பிட்ட நிலப்பகுதியில் பன்னெடுங் காலமாக வாழ்ந்து வருபவர். அந்த நிலப் பகுதி அக் குடிமக்களின் வாழ்வுக்கும் வளத்துக்கும் இன்றியமையாத அடிப்படையாக அமைகின்றது. இடம்பெயர் முயற்சிகள் காரணமாக வந்து, ஒரு நிலப்பகுதியில் வாழ்வைப் புதிதாகத் தொடங்குபவர்கள் வந்தேறு குடிகள் என அழைக்கப்படுகின்றார்கள்.

இந்தியத் துணைக்கண்டத்தின் பழங்குடிகள் திராவிடர்களே என்பது வரலாற்று ஆராய்ச்சியாளரின் துணிபு. வடக்கே இமய மலைத்தொடர்தொட்டு தெற்கே இலங்கைத் தீவு வரையில் உள்ள துணைக்கண்ட நிலப் பரப்பு, பண்டைக்காலத்தில் திராவிட இன மக்களின் உரிமைச் சொத்தாக அமைந்தது. இலங்கைத் தீவின் பழங்குடிகள் திராவிட இன மக்களே.

வடக்கே சிந்து ஆற்றங்கரையில் அகழ்வாராய்ச்சியாளர்களால் கண்டுபிடிக்கப்பட்ட **மொகஞ்சதாரோ, அரப்பா** நாகரிகம் நகர்சார் நாகரிகமாகும். இங்குத் திராவிட இன மக்கள் வாழ்ந்தார்கள்; வளமுற்றார்கள். ஏறத்தாழ 5000 ஆண்டுகட்கு முன்பு செழித்த இந் நாகரிகம் ஆரியரின் படையெடுப்புகளால் தரைமட்டமாக்கப்பட்டது. நாடோடிகளான ஆரியர்கள் நகர்சார் நாகரிகத்தினரான திராவிடரைத் தெற்குநோக்கி விரட்டினர்.

இலங்கைத் தீவு திராவிடரின் நிலப்பகுதி. ஏறத்தாழ 2500 ஆண்டுகட்கு முன்பு **விசயனும்** அவனுடைய கூட்டாளிகளும் வடநாட்டிலிருந்து இலங்கைக்கு வந்தனர். அவர்கள் சிறிது சிறிதாக இலங்கைத் தீவின் நிலப் பகுதியை, அங்கு ஏற்கெனவே வாழ்ந்த திராவிட இன மக்களுடன் பங்குபோடத் தொடங்கினர்.

சிங்கள வரலாற்று நூலான **மாவமிசத்தில் நாகர்கள்** எனக் குறிப்பிடப்படுபவர்கள் ஆதி திராவிடர்கள் எனக் கருதப்படுகின்றார்கள்.

விசயன் இலங்கைக்கு வந்தபோது இலங்கையின் கரையோரத் தரவைநிலப் பகுதிகளில் நாகர்கள் வாழ்ந்தார்கள் என அந் நூல் கூறுகின்றது.

விசயன் பாண்டிய இளவரசியை மணம் செய்தான். பாண்டிய இளவரசி மாதோட்டத் துறையில் வந்திறங்கியபோது, மாதோட்டம் சிறந்த துறைமுகமாக விளங்கியதை வரலாற்று நூல்கள் குறிப்பிடுகின்றன.

தமிழ் ஈழ நாட்டினத்தின் முன்னோர்களின் உரிமைச் சொத்தான இலங்கைத் தீவு முழுவதையும், சிங்கள நாட்டினத்தின் முன்னோடியாகக் கருதப்படும் விசயன், அவன் வழிவந்த மன்னர்கள், மக்கள் ஆகியோருடன் பங்கிட்டு, உரிமை கொண்டாட வேண்டியதாயிற்று.

## திராவிடச் சின்னங்கள்

விசயனும் கூட்டாளிகளும் இத் தீவில் காலடி எடுத்து வைத்தபொழுது, தமிழர் தீவின் நிலப்பரப்பெங்கும் வாழ்ந்தனர்; வாழ்ந்தமைக்கு அடையாளமாகத் தமது பண்பாட்டுச் சின்னங்களை நிறுவியிருந்தனர். சிந்துவெளியில் உள்ள மொகஞ்சதாரோ,

www.tamilarangam.net



அரப்பா நாகரிக காலத்துக்கு முன்பிருந்தே திராவிடர் இலிங்க வழிபாட்டுக்காரராக — மீனைத் தமது சின்னமாகக் கொண்டவராக — கலைஞர்கள், சிற்பிகள், கல்விமான்கள், தத்துவார்த்திகள், கோள்கணிதம் தெரிந்த அறிவியலாளர்களாக இருந்தனர்.

விசயன் இலங்கை வந்தடைந்த காலத்தில் திராவிடர் தமிழராக முகிழ்த்து இருந்தனர். ஈழத்திலும் தமிழ்நாட்டிலும் வாழ்ந்த தமிழர், சங்கம் அமைத்துத் தமிழ் வளர்த்தனர்; அறிவு பெருக்கினர்.

**ஈழத்துப் பூதன்தேவனார்** என்ற சங்கப் புலவர் ஈழநாட்டைச் சேர்ந்தவர். அகத் துறைப் பாடல்கள் பல பாடியுள்ளார் அவர். இவரின் பாடல்கள் சங்க இலக்கியத்தில் உள. அகநானூற்றில் மூன்றும் (88, 231, 307), குறுந்தொகையில் மூன்றும் (189,343,360), நற்றிணையில் ஒன்றும் (366) ஆக ஏழு பாடல்கள் உள. ஈழநாட்டுத் தமிழரின் அகவாழ்வு நெறி இப் பாடல்களில் காணப்படுகிறது.

விசயன் இலங்கைத் தீவில் காலடி எடுத்து வைத்த பொழுது, திராவிடரின் வழிபாட்டிடங்களாக இலிங்க வழிபாட்டிடங்கள் பல இருந்தன. காலத்தால் முற்பட்ட **முன்னேசுவரம்**, கேது முனிவர் வழிபட்டதான **திருக்கேதீச்சரம், திருக்கோணேச்சரம், மாமாங்கேசுவரம்** ஆகியனவும் பிறவுமான ஈசுவரங்கள் இருந்தன. தமிழ்க் கடவுளான முருகனுக்கு மாணிக்கக் கங்கைக் கரையில் திருக்கோயில் அமைத்திருந்தனர். தென்துறை எனப் பெயர் பெற்ற தேவேந்திர முனையில் (Dendurai Dondra) மாபெரும் சந்திரமௌலீசுவரர் இருந்தது.

முன்னேசுவரமும் திருக்கேதீச்சரமும் மேற்குக் கரையில் உள்ளன. நகுலேசுவரம் வடக்குக் கரையில் உள்ளது; திருக்கோணேச்சரம், மாமாங்கேசுவரம் இரண்டும் கிழக்குக் கரையில் உள்ளன. கதிர்காமமும், தேவேந்திரமுனைக் கோயிலும் தெற்குக் கரையில் உள்ளன. தீவின் நடுவே சிவனொளி பாத மலையில் சிவனாலயம் இருந்தது. அனுராதபுரத்தில் மாபெரும் ஈசுவரம் ஒன்றிருந்தது. இன்று அங்குள்ள அப்பயகிரி விகாரம் என்னும் பௌத்தக் கோயில், ஈசுவரன் கோயிலை அழித்து அதன்மேல் எழுப்பப்பட்டதாகும் என மலலசேகர, அரிச்சந்திரா ஆகிய தற்கால வரலாற்று ஆசிரியர்கள் தமது நூல்களில் குறிப்பிட்டுள்ளனர்.

வழிபாட்டுச் சின்னங்களை ஆதாரமாகக் கொண்டு பார்த்தால், தீவின் கரையோரமெங்கும் தமிழர் நெருங்கி வாழ்ந்தனர் என்பது வெளிப்படை. தமிழ்நாட்டில் உள்ள தமிழ் மக்களுடன் நெருங்கிய தொடர்பு உடையவர்களாக இருந்தார்கள்; மாதோட்டம், திருகோணமலை, தென்துறை போன்ற துறைமுகங்களைப் பயன்படுத்தினார்கள். கிழக்கே சாவகத்தடனும் சீனத்துடனும், மேற்கே அராபியர்களுடனும் யவனர்களுடனும் வாணிகம் செய்தார்கள்.

## எல்லாளன் காலம் (கி.மு. 161—117)

**எல்லாளன்** தமிழ் மன்னன்; அனுராதபுரத்தைத் தலைநகராகக் கொண்டு ஏறத்தாழ 2100 ஆண்டுகட்குமுன் இலங்கைத் தீவு முழுவதையும் ஆட்சி செய்தவன். எல்லாளன் காலத்தில் இலங்கைத் தீவின் மேற்கு, வடக்கு, கிழக்குக் கரையோரப் பகுதிகளும், அனுராதபுரத்தை நடுவணாகக் கொண்ட வன்னிப் பகுதியும் தமிழரின் வாழ்விடங்களாக இருந்தன. சிங்களவர் தெற்குப் பகுதியிலும் தென் மேற்குப் பகுதியிலும் செறிந்து வாழ்ந்தனர்.

**எல்லாளனைத்** தாக்கப் புறப்பட்ட சிங்கள அரசன் **துட்டகைமுனு**, முதலில் மாணிக்கக் கங்கைவரை உள்ள தமிழரின் கோட்டையைப் பேடித்தனமாகப் பெண்ணைக் கொடுத்துக் கைப்பற்றினான். தெற்கே மாணிக்கக் கங்கைவரை எல்லாளன் ஆட்சி பரவியிருந்தது.

## தாலமியும், தமிழர் வாழ்விடமும்

ஏறத்தாழ 1800 ஆண்டுகட்கு (கி.பி.140) முன்பு கிரேக்க நாட்டில் புவியியல் அறிஞர் **தாலமி (Ptolemy)** வாழ்ந்தார். இவர் உலகின் வரைபடத்தைத் தயாரித்தார். இன்று கிடைக்கக்கூடிய ஆகப் பழைய உலகின் வரைபடம் தாலமியால் தயாரிக்கப்பட்டதாகும். உலகின் பல்வேறு பகுதிகளைத் தாலமி அதில் குறித்துக் காட்டியுள்ளார்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



இந்தியத் துணைக்கண்டத்தை விரித்து வரைந்து காட்டும் தாலமி, அதில் தமிழரின் வாழ்விடங்களைக் குறிப்பிட்டுக் காட்டியுள்ளார். தமிழர் நாடு 'DAMIRIKE' எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. திராவிட மொழிகளின் ஒப்பியல் இலக்கணம் எழுதிய அறிஞர் **கால்டுவெல்,** தாலமியின் படத்திலுள்ள **தாமிரிக்கே** என்னும் சொல், தமிழரின் நாட்டைக் குறிப்பதை விரிவாக எடுத்துக் கூறியுள்ளார்.

பாண்டிய அரசு, மதுரை போன்ற ஊர்கள் புகழ்பெற்ற வணிகத் துறைமுகங்களாகக் குறிப்பிட்டுக் காட்டப்பட்டுள்ளன. தமிழ்நாட்டின் கிழக்குக் கரையோரத்தில் அந்நாளில் புகழ்பெற்றிருந்த வணிகத் துறைமுகங்களுள் சாலியூரும் ஒன்றாகும். **சாலியூர்த்** துறைமுகம் புகழ்பெற்ற துறைமுகமாகக் கிரேக்க நாட்டில் பெயர் பெற்றிருந்தது.

தமிழ்நாட்டிற்குத் தெற்கேயுள்ள தீவாக இலங்கைத் தீவு தாலமியால் காட்டப் பட்டுள்ளது. இத் தீவிற்குச் **சாலிகே** (SALICE) எனப் பெயரிடப்பட்டது. சாலியூருக்கு எதிராக உள்ள தீவுக்குச் சாலிகே எனப் பெயரிட்டுத் தாலமி வழங்கியிருக்கலாம். தாமிரபரணி ஆற்றுக்கு எதிர்ப்புறமாக உள்ள தீவு தாமிரபரணித் தீவு எனவும் **தப்ரபேன் (TAPROBANE)** எனவும் வழங்கப்படுதலையும் நோக்கவேண்டும்.

தாலமி காட்டியுள்ள இலங்கைப் படத்தில் (படம் 1) இடங்களின் பெயர்கள் நிறைய உண்டு. தாலமியின் படத்தை நோக்குவோர் இலங்கைத் தீவிலுள்ள பெரும்பாலான ஊர்ப் பெயர்கள் தமிழ்ப் பெயர்களாக — தமிழர் தம் வாழ்விடங்களை அழைக்கும் பெயர்களாக இருந்தமையைக் காண்பர்.

''மாதோட்டம் (Mudutti) அந் நாள்களில் சிறந்த துறைமுகமாக — பொருள்கள் விற்க வாங்கப்படும் இடமாக விளங்கியது. வணிகர் நிறைந்த நகரமாக அது விளங்கியது.'' தாலமியின் படத்தில் இவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

தீவின் நடுப்பகுதியில் மலைத்தொடர் காணப்படுகின்றது. இம் மலைத்தொடர் **மலை** 'Malae' என்னும் பெயரால் தாலமியால் வழங்கப்படுகின்றது.

இம் மலைத்தொடரின் தெற்கு எல்லையில் **ஒளிபாதம்** 'Oulipada' குறிப்பிடப்பட்டுள்ளது. சிவனொளிபாத மலையையே இது குறிக்கும்.

தேவேந்திரமுனையும் (Dagana) அங்குள்ள கோயிலும் குறித்துக் காட்டப்பட்டுள்ளன. சந்திரனுக்கு உரிய கோயிலாக (Sacra Luna) இக் கோயில் குறிக்கப்பட்டுள்ளது. சந்திர மௌலீசுவரர் கோயிலையே இது குறிக்கும்.

தாலமி வாழ்ந்த காலத்தில் தமிழர் தம் கரையோர நகரங்களைப் பட்டினம் என வழங்கினர். **பட்டினம்** (SPATANA) எனத் திருகோண மலையைத் தாலமி குறிப்பிடுகிறார்.

வடக்கே பருத்தித்துறை (Boreun Pram) காட்டப்பட்டுள்ளது. தெற்கே உரோகணம், கிழக்கே குமணை என்பனவும் தாலமியின் படத்தில் காட்டப்பட்டுள்ளன.

தாலமியின் வரைபடத்தினை நோக்கினால், தமிழர் தீவின் கரையோரங்களில் வாழ்ந்தமை, கோயில்கள் அமைத்தமை, சிவனொளிபாத மலையைப் போற்றி வழிபட்டமை நன்கு புலனாகும்.


## சைவ நாயன்மார் காலம்

*1300* ஆண்டுகட்கு முன்பு (கி.பி. 6, 7ஆம் நூற்றாண்டுகளில்) தமிழ்நாட்டில் சைவ சமய மறுமலர்ச்சி ஏற்படத் தொடங்கியது. சமண பௌத்த சமயங்கள் வழமையிலிருந்து மறையவும், வடமொழி பாலி போன்ற மொழிகளைத் தமிழ்நாட்டிலிருந்து போக்கவும் நாயன்மார் வழிசெய்தனர். **திருஞானசம்பந்த மூர்த்தி நாயனார், திருநாவுக்கரசு நாயனார், சுந்தரமூர்த்தி நாயனார், சிறுத்தொண்ட நாயனார், அப்பூதி அடிகள் நாயனார்** போன்ற நாயன்மார்களின் எழுச்சியால் தமிழ்நாட்டில் தமிழ்மொழி புத்துயிர் பெற்றது; சைவ சமயம் மறுமலர்ச்சி அடைந்தது.

இந்த நாயன்மாருட் சிலர், **தமிழ்நாடு முழுவதும் சுற்றுப்பயணம் செய்ததுடன் இலங்கைத் தீவுக்கும் வந்தனர்; இங்குள்ள**

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net




படம் ஒன்று : தாலமியின் இலங்கைத் தீவு (கி.பி. 140)

மலை MALEA எனவும், சிவனொளிபாத மலை ULIPADA எனவும், தேவேந்திரமுனையும் சந்திர மௌலீசுவரர் கோயிலும் DAGANA CIVITAS — SACRA LUNA எனவும், திருகோணமலை SPATANA PORTUS எனவும், மாதோட்டம் MUDUTTI எனவும், அது புகழ்பெற்ற வணிகத் துறை முகமாக இருந்ததால் MUDUTTI EMPORIUM எனவும், குமணை BOCANA எனவும், உரோகணம் RHOGADINI எனவும் குறிப்பிடப்பட்டுள்ளன;

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



கோயில்களில் வழிபாடாற்றினர்; தேவாரப் பதிகங்கள் பாடினர். மாதோட்டத்தில் அமைந்துள்ள திருக்கேதீச்சரம், கிழக்கே அமைந்துள்ள திருக்கோணேச்சரம் ஆகிய இரு ஈசுவரங்கள்மீதும் பாடப்பெற்ற தேவாரப் பதிகங்கள் இன்றும் உள்ளன. ஏனைய ஈசுவரங்கள் மீதும் இவர்கள் தேவாரப் பதிகங்கள் பாடியிருக்கலாம். எனினும், அவை இன்றுவரை கிடைக்கவில்லை.

திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார், சுந்தரமூர்த்தி நாயனார் இருவரும் திருக்கேதீச்சரம், திருக்கோணேச்சரம் ஆகிய திருக்கோயில்கள்மீது பாடிய மூன்று தேவாரப் பதிகங்கள் இன்றுவரை கிடைக்கப் பெற்றுள்ளன. இக்காலங்களில் இந் நிலப்பகுதிகளில் தமிழர் வாழ்ந்தனர்; ஆலயங்களைப் பேணினர்; போற்றி வழிபாடாற்றினர் என்பதற்கு இவை சான்று.

## சோழர் காலம்

ஏறத்தாழ 1000 ஆண்டுகட்கு முன்பு (10,11ஆம் நூற்றாண்டுகளில்) சோழராட்சி இலங்கைத் தீவில் நிலைபெற்றது. தமிழ் நாட்டில் தஞ்சாவூரைத் தலைநகராகக் கொண்டு ஆண்ட சோழமன்னர்களுட் தலையானவன் **இராசஇராசசோழன்.** கி.பி. 993-ல் இம் மன்னனின் படைகள் இலங்கையின் வடபகுதிகளைக் கைப்பற்றின. இராச இராச சோழனின் மகனான **இராசேந்திர சோழன்** கி.பி. 1017-ல் படைகளை அனுப்பினான். **சயங்கொண்ட சோழ மூவேந்த வேளார்** தலைமையில் வந்த படைகள் இலங்கை முழுவதையும் கைப்பற்றின. கி.பி. 1070 வரை சோழர்கள் இலங்கையை ஆட்சிசெய்தார்கள்.

சோழர் காலத்தில் தமிழர் தென்கிழக்காசியா முழுவதற்கும் சென்றமையால் வங்காள விரிகுடா **சோழரின் குடா** என அழைக்கப்பட்டது.

சனநாதமங்களம் என அன்று பெயர் கொண்ட இன்றைய பொலன்னறுவையைத் தலைநகராகக் கொண்டு மும்முடிச் சோழ மண்டலம் எனப் பெயரிட்டு இலங்கையைச் சோழர்கள் ஆட்சிசெய்தார்கள்.

சோழர் காலத்தில் தமிழர் இலங்கைத் தீவில் செறிந்து வாழ்ந்தனர். பொலன்னறுவை, அனுராதபுரம் ஆகிய நகரங்களை நடுவணாகக் கொண்ட நிலப்பகுதி முழுவதிலும் தமிழர் வாழ்ந்தனர்.

பொலன்னறுவையில் சிவாலயங்கள் அமைக்கப்பட்டன. அவை பேணப்படுவதற்காக, மானியங்களாகப் பயிர்செய் நிலங்கள் வழங்கப்பட்டன. பாதுகாப்பாகத் தமிழர் குடியிருப்பு அமைக்கப்பட்டது. திருகோணமலையில் உள்ள திருக்கோணேச்சரம் பேணப்பட்டது. இதையொட்டியும் நிலங்கள் மானியங்களாக வழங்கப்பட்டன. பதவியாக் குளத்தை ஒட்டிய நிலப்பகுதிகளில் தமிழர் குடியிருந்தனர். கிழக்குக் கரையோரமாக மாணிக்கக் கங்கை வரையுள்ள நிலப்பகுதி தமிழரின் நிலப்பகுதியாக இருந்தது.

மேற்குக் கரையோரத்தில் முத்துக் குளிப்பு நடைபெற்றது. நீர்கொழும்புக்கு வடக்கேயுள்ள கரையோரப் பகுதிகள் தமிழரின் நிலப்பகுதியாக இருந்தன.

வடக்கே வன்னிப்பகுதியும் யாழ்ப்பாணக் குடாநாடும் தமிழரின் வாழ்விடங்களாக இருந்தன. மாதோட்டத்தில் உள்ள திருக்கேதீச்சரத்துக்கு மானியங்கள் வழங்கப்பட்டன. அங்குள்ள நெடுஞ்சாலை ஒன்று இராச இராசப் பெருந்தெரு எனப் பெயர் கொண்டமை இன்றும் கல்வெட்டுச் சான்றாக உள்ளது.

சிங்கள மக்கள் தெற்கே உரோகணத்திலும் தென்மேற்குப் பகுதிகளிலும் வாழ்ந்தனர். எனினும் சிங்கள நாட்டிலும்கூடச் சந்தைகள், அலுவலகங்கள், ஆட்சி நிலையங்கள் அனைத்திலும் தமிழர் மலிந்து காணப்பட்டனர்.

## சோழர் காலத்துக்குப் பின்

சோழராட்சிக்குப் பின்னர்ச் சிறிது காலம் பொலன்னறுவை சிங்கள மன்னர்களின் ஆட்சித் தலைநகராக இருந்தது. எனினும் காலஞ் செல்லச்செல்ல சிங்கள மன்னர்கள் தமது ஆட்சித் தலைநகரைத் தெற்குநோக்கி நகர்த்தினர். தம்பதெனியா, யாப்பாகுவா போன்ற தலைநகரங்கள் எழுந்தன.

www.tamilarangam.net



எல்லாளன் காலத்தில் அனுராதபுரம் தலைநகராக இருந்தது. சிங்கள ஆட்சியாளரும் தொடர்ந்து அதனைத் தலைநகராகக் கொண்டனர். தமிழரின் படையெடுப்புகளால் சிங்களவரின் தலைநகரம் தெற்கு நோக்கி நகர்ந்தது. மாகன் என்னும் கலிங்க அரசனின் படையெடுப்புக் காரணமாகத் தம்பதெனியா, யாப்பாகுவா போன்ற தலை நகரங்கள் எழுந்தன.

மாகனின் ஆட்சி (கி.பி. 1215-55), பாண்டியப் படைகளின் உதவியுடன் நடைபெற்ற ஆட்சியாகும்; பொலன்னறுவையைத் தலைநகராகக் கொண்ட ஆட்சியாகும். மாகனைத் தொடர்ந்து சந்திரபானு (கி.பி. 1255-62) என்ற சாவக இளவரசன் இலங்கைத் தீவின் கரையோரப் பகுதிகளை — தமிழ்ப் பகுதிகளை — ஆட்சி செய்தான். மாகன், சந்திரபானு ஆகியோரின் ஆட்சிக் காலத்தில் தமிழரின் நிலப்பகுதி தனியாகவும், சிங்களவரின் நிலப்பகுதி தனியாகவும் ஆட்சி செய்யப்பட்டன. மேற்கு, வடக்கு, கிழக்குக் கரையோரப் பகுதிகள் தமிழரின் நிலப்பகுதிகளாக இருந்தன. நாட்டின் வடமத்திய, மத்திய, தென்மேற்கு, தெற்குப் பகுதிகள் சிங்கள நிலப்பகுதிகளாக இருந்தன. சிங்கள நிலப்பகுதிகளின் முதன்மையான ஊர்களில் கூடத் தமிழர் செறிந்து வாழ்ந்தமையைக் கி.பி. 14ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த நிக்காய சங்கிரகம் என்னும் சிங்கள நூல் விளக்கிக் கூறும்.

## ஆரியச் சக்கரவர்த்திகள்

எண்ணூறு ஆண்டுகட்கு முன் (கி.பி. 1282) இலங்கைத் தீவில் உள்ள தமிழரின் தனி ஆட்சி மீண்டும் எழுந்தது. யாழ்ப்பாணத்து நல்லூரைத் தலைநகராகக் கொண்டு எழுந்த மன்னர்கள் **ஆரியச் சக்கரவர்த்திகள்** என அழைக்கப்பட்டனர்.

ஆரியச் சக்கரவர்த்திகளின் ஆட்சியில் தமிழ் ஈழ நிலப்பகுதி வரையறுக்கப்பட்ட எல்லைகளை உடையதாக இருந்தது. மேற்கே நீர்கொழும்புக்கு வடக்கேயுள்ள வாய்க்கால் ஆற்றில் (மாஓயா) இருந்து கரையோரமாக உள்ள நிலப்பகுதி தமிழ் ஈழ அரசின் ஆட்சியில் இருந்தது. சிலாபம், முன்னேச்சரம், குசலை, உடைப்பு, ஆனைமடு, புத்தளம், கற்பிட்டி, வண்ணாத்திவில்லு, குதிரைமலை, வில்பற்று, நானாட்டான், முசலி, மன்னார் வரையுள்ள மேற்குக் கரையோரப் பகுதியைத் தளமாகக் கொண்டு ஆரியச் சக்கரவர்த்திகள் முத்துக்குளிப்பு, சங்குக் குளிப்பு நடாத்தினர். தென்கடல் என வழங்கப்பட்ட மன்னார் வளைகுடாவின் கிழக்குப் பகுதியில் முத்துக்குளிக்கும் உரிமை ஆரியச் சக்கரவர்த்திகளுடையதாக இருந்தது.

தமிழ்நாட்டில் தூத்துக்குடிக் கரையில் இருந்த குருகுலச் சாதியைச் சேர்ந்த தமிழர் முத்துக்குளிப்புக்காகவும் கடற்றொழிலுக்காகவும் இலங்கையின் மேலைக் கரையோரங்களில் வந்து குடியேறினர். நீர்கொழும்பில் இன்றுள்ள பரதகுலத்தைச் சேர்ந்தவர்கள், இவ்வாறு குடியேறியவர்களின் வழித்தோன்றல்களே.

கி.பி. 1345 செப்டெம்பர் 21ஆம் நாள் **இபன் பற்றுற்றா** என்ற பெரியார் இலங்கைத் தீவுக்கு வந்தார். மாலைத் தீவுகளிலிருந்து கப்பலில் கொழும்பை நோக்கிப் புறப்பட்ட அவர், காற்று வேகமாக வீசியதால் புத்தளக் கடற்கரையில் கரைசேர்ந்தார். முத்துக் குளிப்புத் தொழிலை நேரடியாக மேற்பார்வையிடுவதற்காக ஆரியச் சக்கரவர்த்தி புத்தளம் சென்று முகாமிட்டிருந்தார்.

எனவே, இபன் பற்றுற்றா ஆரியச் சக்கரவர்த்தியின் அனுமதிபெற்றுக் கரையேறியதோடு, மன்னரின் விருந்தினராகவும் தங்கினார். மன்னரின் உதவியுடன் சிவனொளிபாத மலை, தேவேந்திரமுனை ஆகிய இடங்களைப் பார்வையிட்டார். சிங்கள நாட்டிலிருந்த சைவக்கோயில்களுக்குத் தடையின்றிச் செல்லும் உரிமையை ஆரியச் சக்கரவர்த்திகள் பெற்றிருந்தனர்.

மீண்டும் இபன் பற்றுற்றா புத்தளம் வந்து அங்கிருந்து இந்தியாவிற்குச் சென்றார். ஆரியச் சக்கரவர்த்தி உயர்சாதி முத்துகளை இவருக்கு அன்பளிப்பாகக் கொடுத்ததுடன், பாரசீக மொழியில் இபன் பற்றுற்றாவுடன் கலந்துரையாடினார். இந்த விவரங்களை எல்லாம் இபன் பற்றுற்றா தமது பயண நூலில் விரிவாகக் குறிப்பிட்டுள்ளார்.

www.tamilarangam.net



வாய்க்கால் ஆற்றிலிருந்து வடக்கேயுள்ள மேற்குக் கரையோரம் தமிழரின் நிலப்பகுதி என்பதற்கு வரலாற்றுச் சான்று வேறென்ன வேண்டும்? இன்றும் மேற்குக் கரையோர ஊர்களின் பெயர்கள் யாவும் தமிழிலேயே உள்ளன. ஆங்காங்கு பொட்டல் பொட்டலாகத் தமிழர் குடியிருப்புகளும் உள்ளன.

தேவேந்திரமுனைக்குச் சென்ற இபன் பத்தூத்தா அங்குள்ள இந்துக் கோயிலில் ஆயிரம் பிராமணர்கள் யாகபூசை நிகழ்த்தியதையும், ஐந்நூற்றுக்கு மேற்பட்ட தேவதாசிப் பெண்கள் இறைவனைத் துதித்துப் பாடி ஆடியதையும் கண்டார். அக்கோயிலின் விக்கிரகம் தங்கத்தால் ஆனது. தேவேந்திர முனை நகரின் வருவாய் முழுவதும் அக் கோயிலுக்கு அர்ப்பணிக்கப்பட்டிருந்தது. இவற்றை இபன் பத்தூத்தா தமது பயண நூலில் குறிப்பிட்டுள்ளார்.

ஆரியச் சக்கரவர்த்திகள் தாம் ஆண்ட நிலப்பகுதிகளைப் பிரித்து, ஆட்சித் தலைவர்களை அமர்த்தினர். வடமராட்சி, தென்மராட்சி, வலிகாமம், தீவுப்பற்று, பச்சிலைப் பள்ளி, கரைதுறைப்பற்று, கரைச்சிக் குடியிருப்பு, பனங்காம வன்னிமை, முள்ளியவளை, கொட்டியாற்றுப் பற்று, பழுகாம வன்னிமை, பாணமை வன்னிமை எனவும் பிறவுமாகப் பல ஆட்சிப் பிரிவுகள் இருந்தன. இப் பிரிவுகளுட் சில மன்னனின் நேரடிக் கண்காணிப்பிலும், சில தன்னாட்சியுள்ள ஆட்சிப் பிரிவுகளாகவும் இருந்தன. வன்னி நாட்டில் உள்ள வன்னிமைகள் தன்னாட்சியுள்ள ஆட்சிப் பிரிவுகளாக இருந்தன.

ஆரியச் சக்கரவர்த்திகளின் ஆட்சியில் இருந்த பாணமை, பழுகாமம், கொட்டியாற்றுப் பற்று, பனங்காம வன்னிமை போன்றவை யாழ்ப்பாண அரசின் மேலாணையை ஏற்றிருந்த ஆட்சித் தலைவர்களால் ஆட்சி செய்யப்பட்டன.

கும்புக்கன் ஆறு, மாணிக்கக் கங்கை ஆகியவற்றைத் தென்மேற்கு எல்லையாகக் கொண்டதே பாணமை வன்னிமையாகும். கதிர்காமம், குமணை, உகந்தை, பொத்துவில், பாணமை, அம்பாறை ஆகிய இடங்களும் அயலும் இவ் வன்னிமையின் ஆதிக்கத்தில் இருந்தன.

மாவலி கங்கையை மேற்கெல்லையாகவும், வெருகல் ஆற்றை வடக்கெல்லையாகவும் கொண்டு அமைந்தது பழுகாம வன்னிமை. மட்டக்களப்பு வாவியைச் சுற்றிலும் உள்ள ஊர்களுடன் ஓமுனை, உகனை போன்ற இடங்களையும் இவ் வன்னிமை உள்ளடக்கியது. வேடர்கள் வதியும் விந்தனைப் பகுதியும் பழுகாம வன்னிமைக்கு உட்பட்டிருந்தது.

வெருகல் ஆற்றுக்கு வடக்கேயுள்ளதும், பறங்கி ஆற்றுக்குத் தெற்கேயுள்ளதும், சேருவிளை, மூதூர், தம்பலகாமம், திருகோணமலை, கந்தளாய், பதவியாக்குளம், பன்குளம், திறப்பனை, குச்சவெளி, நிலாவெளி ஆகிய இடங்களை உள்ளடக்கியதுமான வன்னிமைதான் கொட்டியாற்றுப் பற்று ஆட்சிப் பிரிவு. கொட்டியாற்றுக்குடா எனத் திருகோணமலைத் துறைமுகப் பகுதி வழங்கப்பட்டது.

மன்னாரை ஒட்டிய பகுதிகள் பனங்காம வன்னிமையின் ஆட்சியில் இருந்தன. முல்லைத்தீவை ஒட்டிய பகுதிகள் முள்ளியவளை வன்னிமையின் ஆட்சியில் இருந்தன.

ஆரியச் சக்கரவர்த்திகளின் ஆட்சியில் தீவின் வடக்கு, கிழக்கு, மேற்குக் கரையோர நிலப்பகுதிகள் தமிழ் ஈழ நிலப்பகுதிகளாக இருந்தன. 13ஆம் நூற்றாண்டின் இறுதி தொட்டு 17ஆம் நூற்றாண்டுத் தொடக்கம் வரை ஆரியச் சக்கரவர்த்திகள் நல்லூரைத் தலைநகராகக் கொண்டு ஆட்சிசெலுத்தினர்; ஏறத்தாழ 500 ஆண்டுகட்கு முன்பு ஆரியச் சக்கரவர்த்திகளின் ஆட்சி குன்றத் தொடங்கியது. மேலைநாட்டுக் கடலாடிகளாக முதலில் போர்த்துக்கேயர் வந்தனர். வணிகம் செய்ய வந்தவர்கள் நாடுகளைக் கைப்பற்ற முற்பட்டனர்.

போர்த்துக்கேயரின் வருகையால் நல்லூரைத் தலைநகராகக் கொண்ட தமிழ் ஈழ அரசின் வலிமை குன்றியது. கோட்டையைத் தலைநகராகக் கொண்ட கீழ்நாட்டுச் சிங்கள அரசு போர்த்துக்கேயரின் ஆட்சிக்குட்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



பட்டதும், கண்டியைத் தலைநகராகக் கொண்ட மலைநாட்டுச் சிங்கள அரசின் வணிக நடவடிக்கைகட்கு மேற்குக் கரையோரத் துறைமுகங்கள் பயன்படாமற் போயின. எனவே, கண்டி அரசு கிழக்குக் கரையோரத் துறைமுகங்களைப் பயன் படுத்தத் தொடங்கியது. தமிழ் ஈழ அரசின் வலிமை குன்றியதால் கொட்டியாற்றுப் பற்று வன்னிமை, பழுகாம வன்னிமை, பாணமை வன்னிமை தமிழ் ஈழ மன்னர்களின் மேலாணையைவிட்டுக் கண்டி அரசின் மேலாணையையும் பாதுகாப்பையும் நாடின; எனினும் தன்னாட்சியுடைய தமிழ் நிலப்பகுதி களாக அவை ஆட்சிசெய்யப்பட்டன;

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

மூன்றாவது

# மேலைநாட்டவரும் தமிழ் ஈழ நிலங்களும்

## போர்த்துக்கேயர் காலம் (கி.பி. 1619 - 38)

போர்த்துக்கேய நாட்டைச் சேர்ந்த **வாசுக்கொட காமா** கி.பி. *1498*ஆம் ஆண்டில் இந்தியத் துணைக்கண்டத்துக்கு வந்தார். மேனாடுகளிலிருந்து இந்தியாவுக்குக் கடல் வழி வருகின்ற பாதையை இவர் தொடக்கி வைத்தார். இவரைத் தொடர்ந்து மேலை நாட்டவர் இந்தியத் துணைக்கண்டத்திற்குப் பெருமளவில் வந்தனர்.

முதலில் போர்த்துக்கேயர்கள் வந்தனர். வாணிகத்தை நோக்கமாகக்கொண்டு வந்த இவர்கள், பின்னர் ஆட்சியுரிமைகளில் தலையிடத் தொடங்கினர். சிறிது காலத்திற்குப் பின் நாடுகளின் அரசுரிமைகளையும் தமதாக்கிக் கொண்டனர்.

இலங்கைத் தீவுக்குப் போர்த்துக்கேயர் வந்தபொழுது, மூன்று அரசுகள் ஆட்சிசெய்து கொண்டிருந்தன. யாழ்ப்பாணத்து நல்லூரைத் தலைநகராகக் கொண்ட தமிழ் ஈழ அரசு, கோட்டையைத் தலைநகராகக் கொண்ட கீழ்நாட்டுச் சிங்கள அரசு, கண்டியைத் தலைநகராகக் கொண்ட மலைநாட்டுச் சிங்கள அரசு என்பன அம் மூன்று அரசுகள்.

போர்த்துக்கேயர் முதலில் கோட்டையைத் தலைநகராகக்கொண்டு கீழ்நாட்டுச் சிங்கள அரசைத் தமது ஆட்சியின்கீழ்க் கொண்டு வந்தார்கள். பின்னர், கி.பி. *1619* ஆனி மாதத்தில், தமிழ் ஈழ அரசின் இறைமை போர்த்துக்கேயரைச் சென்றடைந்தது. தமிழ் ஈழ அரசின் கடைசி மன்னனான **சங்கிலி மன்னன்** போர்த்துக்கேயரால் சிறைப் பிடிக்கப்பட்டு நாடு கடத்தப்பட்டுக் கோவாவில் (இந்தியா) தூக்கிலிடப்பட்டான்.

ஆரியச் சக்கரவர்த்திகளின் ஆட்சிக்காலப் பிற்பகுதியில் கிழக்குக் கரையோரத்தில் உள்ள மூன்று வன்னிமைகட்கான ஆட்சித் தலைவர்கள், ஆரியச் சக்கரவர்த்திகளின் மேலாணையை ஏற்பதை விடுத்துக் கண்டி அரசனின் மேலாணையை ஏற்றிருந்தனர். நல்லூர் அரசு வீழ்ச்சியடைந்ததும், முள்ளிய வளைப் பகுதியில் ஆட்சிசெய்த அடங்காப்பற்று வன்னிமை போர்த்துக்கேய ஆட்சியை ஏற்றுக்கொள்ள மறுத்து, எந்த அரசின் மேலாணையையும் ஏற்றுக்கொள்ளாத ஆட்சிப் பிரிவாக அமைந்தது. தமிழ் ஈழ அரசின் வீழ்ச்சியால் யாழ்ப்பாணக் குடாநாடும், மன்னாரை யொட்டிய மேற்குக் கரையோரப் பகுதிகளும் போர்த்துக்கேயரின் நேரடி ஆட்சியின்கீழ் வந்த நிலப் பகுதிகளாக அமைந்தன.

போர்த்துக்கேயர் காலத்தில் இலங்கைத் தீவு பல்வேறு ஆட்சிகளின்கீழ் அமைந்தது.

வடக்கே குடாநாட்டையும் மேற்குக் கரையோரத்தையும் போர்த்துக்கேயர் ஆட்சி புரிந்தனர்; இதற்கெனத் தனி ஆட்சியமைப்பை நிறுவினர். கொழும்பில் உள்ள ஆட்சித் தலைவரை மேலாக ஏற்றுக்கொண்டாலும், யாழ்ப்பாண அரசை ஆட்சிசெய்த **போர்த்துக்கேயத் தளபதி, நீதிமுறைகளை**

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

யும் ஆட்சிமுறைகளையும் தமிழ் ஈழ அரசர்களான ஆரியச் சக்கரவர்த்திகளின் வழமைக்கேற்ப நடாத்தினார்.

குடாநாட்டுக்குத் தெற்கேயுள்ள வன்னிப் பகுதிகள் போர்த்துக்கேயரின் மேலாணையை ஏற்றுக்கொள்ளவில்லை; போர்த்துக்கேயருக்குத் திறை கொடுக்கவில்லை; கண்டி அரசனின் மேலாணையை ஏற்றுக்கொள்ளவில்லை; கண்டி அரசனுக்குத் திறை கொடுக்கவில்லை; எந்த அரசின் பாதுகாப்பையும் நாடவில்லை. தன்னாட்சியுடைய வன்னிமைகளாக, அத் தலைவர்கள் ஆட்சிசெய்தனர்.

கிழக்குக் கரையோரத்தில் உள்ள கொட்டியாற்றுப் பற்று வன்னிமை, பழுகாம வன்னிமை, பாணமை வன்னிமை ஆகிய மூன்றும் கண்டி அரசனின் மேலாணையை ஏற்றிருந்தன; பாதுகாப்பைக் கோரியிருந்தன. எனினும் தன்னாட்சியுரிமையுள்ள தமிழ் ஆட்சிப் பிரிவுகளாகவே செயற்பட்டன.

மாவலி கங்கைக்குக் கிழக்கேயுள்ள நிலப் பகுதிகள், கும்புக்கன் ஆற்றுக்கு வடக்கேயுள்ள நிலப்பகுதிகள் இவ் வன்னிமைகளின் ஆட்சிக்குட்பட்டிருந்தன.

பல்வேறு ஆட்சிகளின்கீழ் ஆளப்பட்டிருப்பினும், தமிழ் ஈழ நிலப்பகுதியின் தமிழ்த் தன்மை மாறாதிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## ஒல்லாந்தர் காலம் (கி.பி. 1638—1795)

**ஒல்**லாந்தரும் மேலைநாட்டவரே; ஏலம், கருவா போன்ற மணப்பொருள்களை வாங்க வந்தவர்கள் நாடுகளின் ஆட்சியுரிமையில் தலையிட்டார்கள். கி.பி. 1638-ல் மட்டக்களப்பைத் தாக்கி, அங்கு முதன் முதலில் கோட்டை அமைத்தனர். கி.பி. 1656-ல் கொழும்பைத் தாக்கி வெற்றிபெற்றார்கள். கி.பி. 1658-ல் யாழ்ப்பாணத்தைத் தாக்கி வெற்றிபெற்றார்கள். படிப்படியாக, போர்த்துக்கேயரை இலங்கைத் தீவிலிருந்து ஒல்லாந்தர் விரட்டினர்; தீவின் கரையோரப் பகுதிகளைத் தமது ஆட்சியின்கீழ்க் கொண்டுவந்தனர்.

## றொபெட் நொக்சு

கி.பி. 1660ஆம் ஆண்டில் **றொபெட் நொக்சு** (Robert Knox) என்ற ஆங்கிலேயர், திருகோணமலையில் கண்டி அரசனின் படைத் தளபதிகளால் சிறைப்பிடிக்கப்பட்டார். அப்போது கொட்டியாற்றுப் பற்று வன்னிமை, கண்டி அரசனின் மேலாணையை ஏற்றிருந்தது. கி.பி. 1679ஆம் ஆண்டுவரை பத்தொன்பது ஆண்டுகள் றொபெட் நொக்சு கண்டி அரசனின் கைதியாக வாழ்ந்தார்; வாரியப்பொலைக்கு அண்மையில் உள்ள பண்டாரகொசுவத்தையில் சில காலம் வாழ்ந்தார்.

1679-ல் றொபெட் நொக்சு கண்டி அரசனின் சிறையிலிருந்து தப்பியோடினார். தப்பியோடிய பின், தமது சிறைவாழ்வுபற்றிய விரிவான நூலொன்றை எழுதினார்.

**றொபெட் நொக்சு** தமது நூலில் இலங்கைத் தீவில் தமிழர் தனி நாட்டினமாகவாழ்வதைக் குறிப்பிட்டுள்ளார். சிங்கள நாட்டினத்தவரைவிடச் சிறிது நாகரிகமுடையவராகத் தமிழர் வாழ்ந்தமையையும் குறிப்பிட்டுள்ளார்.

தப்பியோடும் வழியில் அனுராதபுரத்தை அடைந்த றொபெட் நொக்சு அங்குச் சிங்கள மொழி தெரிந்தவர் இல்லாமையைக் குறிப்பிட்டுச் சந்தையிலும், கடைத்தெருக்களிலும், ஊர்களிலும் தமிழர் வாழ்ந்தமைபற்றிக் கூறியுள்ளார். கண்டி அரசனின் ஆட்சிக்கு உட்பட்டிருந்த அனுராதபுரப் பகுதியின் ஆட்சித் தலைவராக இருந்தவர், சிங்கள மொழியைத் தெரிந்திராத தமிழர். றொபெட் நொக்சு அவருடன் உரையாடிய பொழுது, மொழிபெயர்ப்பாளர் ஒருவரின் உதவியை நாடினார்.

அனுராதபுரத்திலிருந்து அருவியாற்றின் கரையோரமாகக் காட்டுக்குள்ளாக நடந்து அரிப்புக்கு வந்துசேர்ந்தார். அனுராதபுரத்திலிருந்து மன்னார் செல்லும் நெடுஞ்சாலையில் சென்றால் தமிழரைச் சந்திக்க நேரிடும் என **றொபெட் நொக்சு** அஞ்சினார்.

மேலும், அக்காலத்தில் வன்னிப்பகுதியைக் கைலாய வன்னியன் ஆட்சி செய்தமையை நொக்சு குறிப்பிடுகின்றார். இந்த ஆட்சித் தலைவன் தமிழனாக இருந்தமை,

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



வன்னியில் உள்ள தமிழ் நிலப்பகுதியை ஆட்சி செய்தமை, ஒல்லாந்தருக்கோ கண்டி அரசனுக்கோ திறை செலுத்தாது ஆட்சிபுரிந்த விவரங்கள் முதலியன றொபெட் நொக்சின் பயணக் கட்டுரையில் உண்டு.

கைலாய வன்னியன் கண்டி அரசனுடன் நட்புப் பூண்டிருந்தான்; எனினும், திறை செலுத்தவில்லை; ஒல்லாந்தருடன் பகைமை பூண்டிருந்தான். தன்னாட்சியுள்ள — சுதந்திரமுள்ள — அரசை அமைத்து ஆட்சிசெய்த ஆட்சித் தலைவன்—இளவரசன் என இவனை றொபெட் நொக்சு குறிப்பிட்டுள்ளார்.

இலங்கைத் தீவின் படத்தையும் **றொபெட் நொக்சு** வரைந்துள்ளார் (படம் 2). அப் படத்தில் கைலாய வன்னியனின் ஆட்சிக்குட்பட்ட பகுதிகளைத் தெளிவாகக் காட்டியுள்ளார். 'COYLOT WANNEA' என்னும் எழுத்துடன் குடா நாட்டுக்குத் தெற்கேயுள்ள வன்னிப்பகுதியும், கிழக்குக் கரையோரமாக உள்ள வன்னிமைகளும் தமிழ் ஆட்சித் தலைவனான கைலாய வன்னியனின் ஆட்சியின்கீழ் இருந்தமையை **றொபெட் நொக்சு** குறிப்பிட்டுள்ளார்.

## ரேலண்ட் குறிப்புகள்

ஒல்லாந்தரின் ஆட்சிக் காலத்தில் இலங்கைத் தீவிற்கு வந்து, இத் தீவின் தன்மைகளைப் பற்றி எழுதியவர்களுள் **அட்ரியன் ரேலண்ட்** (Adrean Reland) என்பவரும் ஒருவர். இவர் கீழைநாட்டுப் பண்பாடுபற்றிக் கற்ற ஒல்லாந்து நாட்டு அறிஞர்; பல மொழிகளைப் பயின்றவர். தமிழ், சிங்களம், மலாய் மொழிகள்பற்றி இவர் எழுதியுள்ளார். 17ஆம் நூற்றாண்டின் இறுதியில் இவர் இலங்கைக்கு வந்திருந்தார். இவரின் குறிப்புகளாவன:

*"இந்தத் தீவைவிட்டுப் புறப்படுமுன், நான் தமிழ்மொழி பற்றியும் சிறிது கூறவேண்டும். இந்தத் தீவின் பெரும்பகுதி தமிழரின் வாழ்விடமாக உள்ளது. இந்தப்பகுதி கைலாய வன்னியனால் (Coilat Wanea) ஆட்சி செய்யப்படுவதுடன், அவனின் நாடு எனவும் அழைக்கப்படுகின்றது; இதனுடன் இணைந்துள்ள படத்தில் கைலாய வன்னியனின் ஆள்புலத்தைக் காணலாம். இங்கு வாழ்கின்ற மக்கள் சிங்கள வரின் ஆட்சிக்குட்பட்ட குடிமக்கள் அல்லர். எங்கள் (ஒல்லாந்தர்) ஆட்சிக்குட்பட்டவருமல்லர். கரையோரமாக உள்ள நிலமனைத்தும் இந்த இளவரசனுக்கே (கைலாய வன்னியன்) உரியது. கரையோரப் பகுதிகளில் உள்ள மக்களுட் பெரும்பான்மையினர் தமிழ்மொழியைப் பேசுகின்றனர். நீர்கொழும்பு நகரத்திலிருந்து தெற்கே தேவேந்திரமுனை வரையுள்ள கரையோரப் பகுதிகளில் சிங்களமொழி பேசப்படுகிறது. யாழ்ப்பாணப் பகுதி மாவட்டத்திலும், கரையோரத்திலுள்ள துணைக்கண்டத்துக்கு அண்மையிலுள்ள ஏனைய மாவட்டங்களிலும் தமிழ்மொழி பேச்சுவழக்கில் உள்ளது."*

## சுவைட்சர் குறிப்புகள் (கி.பி. 1700)

ஒல்லாந்தர் காலத்தில் இலங்கைத்தீவுக்கு வந்து சென்றவர்களுள் **கிறித்தோபர் சுவைட்சர்** (Christopher Schewitzer) என்பவர் விட்டுச் சென்ற குறிப்புகளும் முக்கியமானவை. அவர் கூறுவதாவது:

*"இந்தத் தீவின் மற்றக் குடிகளான தமிழர் காலி, மட்டக்களப்பு, திருகோணமலை, மன்னார், யாழ்ப்பாணம், அரிப்பு, கற்பிட்டியிலிருந்து நீர்கொழும்பு வரையும் வாழ்கின்றனர். வன்னி நாட்டிலுள்ள தமிழரைத் தவிர ஏனைய தமிழர் ஒல்லாந்தரின் ஆட்சியின்கீழ் உள்ளனர். வன்னி நாட்டிலுள்ள தமிழர் தமக்கென ஓர் அரசைக் கொண்டுள்ளனர்."*


## ஒல்லாந்தரின் ஆட்சிப்பிரிவுகள்

கைலாய வன்னியன், அடங்கா அரசுரிமை கொண்டு ஒல்லாந்தரினால் கைப்பற்றப்படாமல் வன்னிப்பகுதியை ஆட்சி செய்தான். வன்னிப்பகுதி தவிர்ந்த ஏனைய கரையோரப் பகுதிகள் ஒல்லாந்தரின் ஆட்சியின்கீழ் இருந்தன.

இலங்கைத் தீவில் ஒல்லாந்தர் ஆட்சிக் காலத்தில் இரு இனவழி நாட்டினங்கள்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net




படம் இரண்டு: றொபெட் நொக்சின் இலங்கைத் தீவுப் படம் (கி.பி.1679)

கி.பி. 1660 வரை கண்டியரசனின் கைதியாக இருந்த றொபெட் நொக்சு, தமது இலங்கை அனுபவங்களைப் பற்றி எழுதி வெளியிட்ட நூலில் உள்ள படம். கைலாய வன்னிமையின் ஆதிக்க எல்லைகளைப் படத்தில் காட்டியுள்ளார். புள்ளிக்கோடாக அரு ஊ யாற்றின் கீழிருந்து தொடங்கும் அந்த எல்லை, வடக்கின் வன்னிப்பகுதியையும், கிழக்கின் கொட்டியாறு, பாணமை வன்னிமைகளையும், உள்ளடக்குகின்றது. கைலாய வன்னியனின் நாடு (Coylot Wannes Country) எனக் குறிக்கப்பட்டுள்ளது.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



இருந்தன. தமிழ் நாட்டினம் இருந்தது; சிங்கள நாட்டினம் இருந்தது. மொழிவழியில் மட்டுமல்ல; சமயம், வாழ்வுமுறை, பண்பாடு, நீதி, அரசு, ஆட்சிமுறை முதலிய எல்லா வகைகளிலும் இந்த இரு நாட்டினங்களும், தம்முள் வேறுபட்டிருந்தன. சிறப்பாக, இந்த இரு நாட்டினங்களும் பிரித்தறியக்கூடியதும், வேறுவேறாக்கப்படக் கூடியதுமான தனித் தன்மை உடைய நிலப்பகுதிகளைக் கொண் டிருந்தன.

கண்டி அரசனின் ஆட்சிக்கு உட்பட்ட நிலப்பகுதிகளிலும், வடமத்திய, தெற்கு, தென்மேற்குப் பகுதிகளிலும் சிங்கள நாட் டினத்தினர் வாழ்ந்தனர்.

ஒல்லாந்தரின் ஆட்சிக்கு உட்பட்ட நிலப் பகுதிகளிலும், கைலாய வன்னியன் என்ற ஆட்சித் தலைவனின் ஆட்சிக்கு உட்பட்ட நிலப்பகுதிகளிலும் தமிழ்நாட்டினத்தினர் வாழ்ந்தனர்.

தமிழ் நாட்டினத்துக்கும் சிங்கள நாட் டினத்துக்கும் உள்ள அடிப்படை வேறுபாடு களையும், தனித்தன்மை வாய்ந்த நிலப்பகுதி களையும் தெரிந்துகொண்டனர் ஒல்லாந்தர். எனவே, தமிழரைத் தனியாகவும், சிங்கள வரைத் தனியாகவும் ஆட்சிக்குட்படுத்த வழி செய்தனர்.

இலங்கைத் தீவின் கரையோர நிலப்பகுதி கள் ஒல்லாந்தரால் ஆறு ஆட்சி மாவட்டங் களாகப் பிரிக்கப்பட்டன. ஒவ்வோர் ஆட்சிப் பிரிவுக்கும் ஒவ்வோர் ஆட்சித் தலைவர் அமர்த்தப்பட்டார்:

(1) பெந்தோட்டை ஆறு தொடக்கம் வடக்கே தெதுறுஓயா வரையுள்ள **கொழும்பு ஆட்சி மாவட்டம்.**

(2) தெதுறுஓயா தொடக்கம் மோதரகம் ஆறு வரையுள்ள **புத்தளம்-கற்பிட்டி ஆட்சி மாவட்டம்.**

(3) மோதரகம் ஆறு தொடக்கம் வடக்கே யாழ்ப்பாணக் குடாநாடு, வன்னிப் பகுதி என்பனவற்றை உள்ளடக்கி, கிழக்கே கொக்கிளாய் வரையுள்ள பரந்த நிலப்பகுதியான **யாழ்ப்பாண ஆட்சி மாவட்டம்.**

(4) கொக்கிளாய் தொடக்கம் கிழக்குக் கரையோரமாகத் தெற்கே வெருகல் ஆறு வரையுள்ள **திருகோணமலை ஆட்சி மாவட்டம்.**

(5) வெருகல் ஆற்றிலிருந்து கரையோர மாகத் தெற்கே கும்புக்கன் ஆறு வரையுள்ள **மட்டக்களப்பு ஆட்சி மாவட்டம்.**

(6) கும்புக்கன் ஆற்றிலிருந்து தெற்கே உரோகணமும் பெந்தோட்டை ஆறுவரை பரந்ததுமான **காலி ஆட்சி மாவட்டம்.**

இந்த ஆறு ஆட்சி மாவட்டங்களில் ஒவ் வொன்றுக்கும் ஒவ்வோர் ஆட்சித் தலைவர் இருந்தார். இந்த ஆறு ஆட்சித் தலைவர் களும் கொழும்பில் உள்ள ஒல்லாந்த ஆளு நரினால் இணைக்கப்பட்டு ஆட்சிசெய்யப் பட்டனர். சாவகத்தில், சகர்த்தாவில் ஒல் லாந்தரின் கிழக்கிந்தியக் கம்பனியின் தலைமை நிலையம் இருந்தது. அது அங்கிருந்து ஆளு நரைக் கொழும்புக்கு அனுப்பிவைத்தது.

நீதியை நெறிப்படுத்துவதற்காக, மூன்று நீதிப் பிரிவுகளை ஒல்லாந்தர் ஏற்படுத்தினர்:


(1) கொழும்பு ஆட்சி மாவட்டம், புத் தளம் ஆட்சி மாவட்டம் இரண்டும் ஒரே நீதிப் பிரிவாக இணைக்கப்பட்டன. பெந்தோட்டை ஆற்றிலிருந்து மோதரகம் ஆறுவரையுள்ள கரையோர நிலப்பகுதிகள், அங்கு வாழ்ந்த மக்கள் இந் நீதிப் பிரிவுக்குள் அடங்கினர். **கொழும்பு** இதன் தலைமை நிலையம்.

(2) யாழ்ப்பாண ஆட்சி மாவட்டம், திருகோணமலை ஆட்சி மாவட்டம், மட்டக் களப்பு ஆட்சி மாவட்டம் ஆகிய மூன்றும் ஒரே நீதிப் பிரிவுக்குள் இணைக்கப்பட்டன. மோத ரகம் ஆற்றிலிருந்து கும்புக்கன் ஆறுவரை யுள்ள வடக்கு, கிழக்குப் பகுதியே இந்த நீதிப் பிரிவு. **யாழ்ப்பாணம்** இதன் தலைமை நிலையம்.

(3) காலி ஆட்சி மாவட்டம் தனி நீதிப் பிரிவு. கும்புக்கன் ஆற்றிலிருந்து பெந்தோட் டை ஆறுவரையுள்ள பகுதியே இந்த நீதிப் பிரிவு. **காலி** இதன் தலைமை நிலையம்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net




படம் மூன்று: ஒல்லாந்தர் கால ஆட்சி மாவட்டங்கள்
(சே.டியு பெரோனின் படத்தைத் தழுவிப்
பேராசிரியர் நடராசா வரைந்த படத்தின் தழுவல்)

ஒல்லாந்தர் காலத்தில் யாழ்ப்பாணம், திருகோணமலை, மட்டக்களப்பு ஆகிய மூன்று ஆட்சி மாவட்டங்களும் தமிழர் நிலப்பகுதிகளாகக் கருதப்பட்டு ஒரே நீதி மாவட்டமாக ஆட்சி செய்யப்பட்டது.

www.tamilarangam.net



தமிழர்க்கெனத் தனியாகவும், சிங்கள வர்க்கெனத் தனியாகவும் நீதிப் பிரிவுகள் ஏற்படுத்தப்பட்டன. சோகன்கூ சைமன்கூ என்ற ஒல்லாந்த ஆளுநர் (கி.பி. 1703-7) யாழ்ப்பாண மக்களின் வழமைகள், நீதிமுறைகள் தனியானவை என்பதை அறிந்து, அவற்றைத் தொகுப்பித்தார்; தேச வழமை என்னும் பெயரில் வெளியிட்டார்; அதற்கமைய நீதி செலுத்தினார்.

யாழ்ப்பாணம், திருகோணமலை, மட்டக்களப்பு, புத்தளம், கற்பிட்டி ஆகிய ஆட்சி மாவட்டங்கள்கூட ஒரே மாதிரியாகத் தமிழரின் ஆட்சிமுறைக்கேற்ப ஆட்சிசெய்யப் பட்டன.

இலங்கைத் தீவில் இருவேறு நாட்டினங்கள் இருந்தன. இவை தனித்தனி அரசுகளால் ஆட்சிசெய்யப்பட்டன. இவை வெவ்வேறான ஆட்சிமுறையைப் பின்பற்றின; வெவ்வேறான நீதிமுறையைப் பின்பற்றின; வெவ்வேறான வாழ்வுமுறைகளைக் கொண்டிருந்தன; மொழி, பண்பாடு, சமயம் என்பனவற்றிலும் வேறுபட்டிருந்தன.

இவற்றை ஒல்லாந்தர் கவனத்தில் எடுத்துக்கொண்டனர். எனவே, அந்த இரு நாட்டினங்களும் தனித்தனியாக ஆட்சி செய்யப்பட வேண்டுமெனக் கருதினர்; ஆட்சி முறையின் தனித்தன்மையைப் பேணினர்; நீதிமுறையின் தனித்தன்மையைப் போற்றிப் பாதுகாத்தனர்.

இதனால் ஒல்லாந்தர் காலத்தில் (கி.பி. 1638—1795) தமிழ் ஈழ நிலப்பகுதிகள் தனியாக அமைந்திருந்தமை ஏற்றுக்கொள்ளப் பட்டது. புத்தளத்திலிருந்து கும்புக்கன் ஆறுவரை பரந்திருந்த நிலப்பகுதி தமிழரின் நிலப் பகுதி என்பதும் ஏற்றுக்கொள்ளப்பட்டது.

## பிரிட்டிசார் காலம் (கி.பி. 1796 — 1947)

ஒல்லாந்தர் ஆட்சியைத் தொடர்ந்து இலங்கைத் தீவின் கரையோரப் பகுதிகள் கி.பி. 1796-ல் பிரிட்டிசாரின் ஆட்சியின்கீழ் வந்தது; 1619-ல் போர்த்துக்கேய அரசைச் சென்றடைந்த தமிழ் ஈழ இறைமை, 1658-ல் ஒல்லாந்தரிடம் சென்றடைந்து, 1796-ல் பிரிட்டிசாரிடம் சென்றடைந்தது.

பிரிட்டிசார், திருகோணமலைத் துறைமுகத்தைத் தமதாக்கிக்கொள்ள வேண்டும் என்று எண்ணங் கொண்டனர்; இந்தியத் துணைக்கண்டம், தென்கிழக்காசிய நாடுகளில் தமது வணிகத்தைப் பெருக்கவும், தமது ஆட்சியை நிலைநாட்டவும், திருகோணமலைத் துறைமுகம் சிறந்த அடித்தளமாக அமையும் எனக் கருதினர். இலங்கைத் தீவின் ஏனைய பகுதிகளிலோ, வணிகத்திலோ அவர்கள் நாட்டங் கொள்ளவில்லை.

கி.பி. 1795-ல் திருகோணமலையைத் தாக்கி வெற்றிபெற்ற பிரிட்டிசார் படிப்படியாக மட்டக்களப்பு, காலி, மாத்துறை பருத்தித்துறை, யாழ்ப்பாணம், மன்னார், அரிப்பு, கற்பிட்டி ஆகிய கோட்டைகளை ஒல்லாந்தரிடமிருந்து கைப்பற்றினர். 1796 பெப்புருவரியில் கொழும்புக் கோட்டையைத் தாக்கி வெற்றிபெற்றனர்.

இலங்கையின் கரையோரப் பகுதி முழுவதும் ஒல்லாந்தரின் ஆட்சியிலிருந்து பிரிட்டிசாரின் கைக்கு மாறியது. கண்டி அரசு தவிர்ந்த ஏனைய பகுதிகள் பிரிட்டிசாரின் ஆட்சிக்குட்பட்டன.

## அரோசிமித்தின் வரைபடம்


கி.பி.1796ஆம் ஆண்டில் பிரிட்டிசு ஆட்சி தொடங்கியபொழுது, சென்னையில் உள்ள செயின்ற் சார்ச்சுக் கோட்டையின் ஆளுநர் மூலமாக ஆட்சி நடத்தப்பட்டது. இந்தியாபற்றிய அலுவல்கள் தொடர்பான பிரிட்டிசு ஆணையாளரிடமிருந்த வரைபடந்தான் இன்று அரோசிமித்தின் (Arrowsmith) இலங்கைப் படம் (படம் 4) என வரலாற்றாசிரியர்களிடையே புகழ்பெற்றுள்ளது.

ஒல்லாந்தரின் ஆட்சியிலிருந்த பகுதிகள் அரோசிமித்தின் படத்தில் தெளிவாகக் காட்டப்பட்டுள்ளன.

இந்த வரைபடத்துக்கமையச் சிங்களவரின் கரையோர நிலப்பகுதிகள், நீர்கொழும்பிலிருந்து தெற்கு-கிழக்காகக் கும்புக்கன் ஆறுவரை பரந்திருக்கின்ற நிலப்பரப்பு ஆகும். ஏனைய கரையோர நிலப்பகுதிகள்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net




படம் நான்கு: அரோசிமித்தின் இலங்கைப் படம்

ஒல்லாந்தரின் ஆட்சியில் இருந்த பகுதிகள் கரையோரமாகக் காட்டப்பட்டுள்ளன. கரையோரப் பகுதிகளைக் கண்டி அரசிடமிருந்து வேறுபடுத்தும் எல்லைக்கோடு காட்டப்பட்டுள்ளது.

www.tamilarangam.net



தமிழர் வாழ்விடங்களாகும். தீவின் நடுப் பகுதி கண்டி அரசனின் ஆட்சிக்கு உட்பட்டிருப்பதும் இந்த வரைபடத்தில் காட்டப் பட்டுள்ளது.

1802ஆம் ஆண்டின் அமெயின்சு ஒப்பந்தத்துக்கு (Treaty of Ameins) அமைய இந்த வரைபடத்தில் காட்டப்பட்ட பகுதிகள்தாம் ஒல்லாந்தரிடமிருந்து பிரிட்டிசாருக்குக் கையளிக்கப்பட்டன.

1796-லிருந்து 1801 வரை, இந்தியாவில் உள்ள கிழக்கிந்தியக் கம்பனியின் ஆட்சியிலிருந்த இலங்கைத் தீவின் கரையோரப் பகுதிகள், 1802 தை முதலாம் நாள் தொடக்கம், பிரிட்டிசாரின் முடிக்குரிய ஆதிக்க நாடாகப் பிரிட்டிசு அரசரின் நேரடி ஆட்சியின்கீழ்க் கொண்டுவரப்பட்டது. முதல் ஆளுநராக நோர்த் என்பவர் கடமைபுரிந்தார்.

## கிளெக்கோர்ண் குறிப்பு

பிரிட்டிசார் ஆட்சி தொடங்கிய காலத்தில் எழுதப்பட்ட குறிப்புகள், தமிழ் ஈழ நிலப் பரப்புத் தனியான நிலப்பரப்பு எனக் கூறுகின்றன. இலங்கையின் முதல் பிரிட்டிசு ஆளுநராக நோர்த் அவர்களின் செயலாளராக இருந்தவர் பேராசிரியர் இயு கிளெக்கோர்ண். அவர் 1799 யூன் முதலாம் நாள் பின்வரும் குறிப்பை எழுதியுள்ளார்:

### தீவின் குடிகள்

*"இலங்கைத் தீவானது மிகப் பழங்காலந்தொட்டே இரு வெவ்வேறு நாட்டினங்களால், வெவ்வேறு பகுதிகளாக உரிமை கொண்டாடப்பட்டது. இத் தீவின் நடுப்பகுதியும் தெற்குப் பகுதியும் வளவை ஆற்றிலிருந்து சிலாபம் வரையுமுள்ள மேற்குப் பகுதியும் சிங்கள நாட்டினத்தால் ஆட்சி செய்யப்பட்ட பகுதிகளாகும். இத் தீவின் வடக்கு கிழக்கு நிலப்பகுதிகள், தமிழரால் ஆட்சிசெய்யப்பட்ட பகுதிகளாகும். இந்த இரு நாட்டினங்களும் சமயத்தாலும், மொழியாலும், வாழ்க்கைப் பண்பாலும் முற்றிலும் வேறுபட்டவை.*

*தமிழர் இந்தியத் துணைக்கண்டத்திலிருந்து குடிபெயர்ந்தனர் போலும்! ஏனெனில் அக்கரையில் உள்ள அதே மொழி, அதே பழக்கவழக்கங்கள், அதே சமயம் என்பனவற்றைக் கொண்டுள்ளனர்."*


இந்தக் குறிப்பு மிக முக்கியமான குறிப்பு, பேராசிரியர் கிளெக்கோர்ண் ஓர் இசுக்கொட்டிசுக்காரர்; குடியேற்ற நாட்டுச் செயலாளராக இலங்கையில் கடமை புரிந்தவர்; இலங்கையைப் பற்றிய பல விவரங்களை நன்கு அறிந்திருந்தவர்; ஒல்லாந்தர் காலத்தில் கிழக்குக் கரைப்பகுதி ஆட்சிப் பிரிவுகள், கும்புக்கன் ஆற்றைத் தெற்கெல்லையாகக் கொண்டிருந்ததை நன்கு அறிந்திருந்தவர். எனினும், தமிழர் நிலப்பகுதி குமணையோடு நிற்காமல் கிரிந்தை, அம்பாந்தோட்டை ஆகிய இடங்கட்கும் பரந்திருந்ததாகவும், வளவை கங்கை வரைக்கும் பரந்திருந்ததாகவும் இவர் கூறுகின்றார். நீர்கொழும்புக்கு வடக்கே, தமிழர் வாழ்விடங்களை அமைத்து வாழ்ந்ததை இவரின் குறிப்புகள் உறுதிப்படுத்துகின்றன.

## கண்டி அரசின் வீழ்ச்சி

கி.பி.1815ஆம் ஆண்டில் கண்டி அரசு பிரிட்டிசு மன்னரின் ஆதிக்கத்தின்கீழ் வந்தது. கண்டியின் கடைசி அரசனான சிறீ விக்கிரம ராச சிங்கன், சிறைப்பிடிக்கப்பட்டுக் குடும்பத்துடன் தமிழ்நாட்டில் உள்ள வேலூருக்கு நாடுகடத்தப்பட்டான்.

கி.பி. 1796-ல் ஒல்லாந்தரிடமிருந்து பிரிட்டிசார் பெற்ற தீவின் கரையோர நிலப் பகுதிகள்பற்றிய விவரங்களையும், கி.பி. 1815-ல் கண்டி அரசனிடமிருந்து பிரிட்டிசார் பெற்ற ஆள்புலங்களையும் குறிக்கும் வரைபடம் ஒன்று இலங்கை நிலஅளவைத் திணைக்களத்தினால் 1946-ல் வெளியிடப்பட்டது. இந்த வரைபடத்தில், போர்த்துக்கேயர் வருகையின்போது இலங்கைத் தீவை ஆட்சி செய்த மூன்று வெவ்வேறு அரசுகளான தமிழ் ஈழ அரசு (யாழ்ப்பாண அரசு), கீழ்நாட்டுச் சிங்கள அரசு (கோட்டை அரசு), மலைநாட்டுச் சிங்கள அரசு (கண்டி அரசு) என்பனவற்றின் எல்லைகளும் காட்டப்பட்டுள்ளன. கிழக்குக் கரையோரத்தில் தமிழ் நிலப்பகுதி

www.tamilarangam.net




படம் ஐந்து: ஒல்லாந்தரின் கரையோரப் பகுதிகளும் கண்டி அரசும் (கி.பி. 1796-1815)

தமிழீழ அரசு என நாம் கருதும் யாழ்ப்பாண அரசு, கீழ்நாட்டுச் சிங்கள அரசான கோட்டை அரசு, மலைநாட்டுச் சிங்கள அரசான கண்டி அரசு ஆகியவற்றின் எல்லைகள் காட்டப்பட்டுள்ளன. ஒல்லாந்தரின் கரையோர நிலப்பகுதியும், 1815-ல் பிரிட்டிசாரைச் சென்றடைந்த கண்டி அரசின் எல்லைகளும் காட்டப்பட்டுள்ளன. யாழ்ப்பாண அரசின் வலிமை குன்றிய இறுதிக்காலத்தில் கிழக்குத் தமிழ் நிலப்பகுதி வன்னிமைகள் கண்டி அரசின் மேலாணையை ஏற்றிருந்தன.

www.tamilarangam.net



ளாக இருந்த வன்னிமைகள், கண்டி அரசனின் மேலாணையை அப்பொழுது ஏற்றிருந்தமையால் கண்டி அரசின் எல்லைக் குள் காட்டப்பட்டுள்ளன.

## அலெக்சாண்டர் சோன்சுடனின் குறிப்பு

அலெக்சாண்டர் சோன்சுடன் (Alexander Johnston) சிறுவனாக இருக்கையில் தம் தந்தை யாருடன் மதுரைக்கு வந்தார்; தமிழ், தெலுங்கு, இந்தி ஆகிய மொழிகளைப் பயின் றார்; சட்டமா அதிபராக இலங்கைக்கு வந்தார்; கி.பி.1806-ல் உயர்நீதிமன்ற நீதி யரசராகப் பதவிபெற்றார். நீதித்துறையில் பல நல்ல நடைமுறைகளை அறிமுகப்படுத் திய இந்த ஆங்கிலேயர், சமூகத்துறையிலும் பல நன்மைகளைச் செய்தார். இலங்கை யில் உள்ள றோயல் ஏசியாட்டிக் கழகக் கிளையைத் தொடங்கி வைத்தவர் இவரே.

கி.பி. 1807 நவம்பர் 4ஆம் நாள், அலெக் சாண்டர் சோன்சுடன், அக்கால ஆளுநராகிய சர் தாமசு மெயிட்லாந்துக்கு எழுதிய குறிப் பொன்றில்,

*''நான் சேகரித்த உள்நாட்டு வழக் கத்தில் உள்ள சில சட்டங்கள் புத் தளம், யாழ்ப்பாணம், திருகோண மலை, மட்டக்களப்பு ஆகிய நான்கு மாகாணங்களிலும் வழமையில் உள''*

என்று குறிப்பிட்ட இவர், இந்த நான்கு மாகாணங்களையும் தமிழ் மாகாணங்கள் எனக் குறிப்பிடுகின்றார்.

மேற்கூறிய குறிப்புத் தவிர, கொழும்பு அரும்பொருட் காப்பகத்தில், இவர் எழுதிய கையெழுத்துக் குறிப்புகள் சில உண்டு. இக் கையெழுத்துக் குறிப்புகளில் ஒரு குறிப்பு (படம் 7), தமிழரின் வாழ்விடங்களைக் குறிப்பிடுகின்றது:

*''வடமேற்கில் உள்ள புத்தளத்தி லிருந்து, தென்கிழக்கே உள்ள குமணை ஆறுவரை உள்ள நிலப் பகுதி, தமிழரின் குடியிருப்பு ஆகும். மேற்கே சிலாபம் ஆற்றிலிருந்து தென் கிழக்கே உள்ள குமணை ஆறுவரை உள்ள நிலப்பகுதி சிங்களவரின் குடி யிருப்பு ஆகும்.''*

சிலாபம் ஆறு என்பது தெதுறு ஓயாவை யும், குமணை ஆறு என்பது கும்புக்கன் ஆற்றையும் குறிக்கின்றது.

அலெக்சாண்டர் சோன்சுடனின் காலத் தில் புத்தளம் மாவட்டத்தில் தமிழர் நெருங்கி வாழ்ந்தனர் என்பது தெளிவு.

மேலும், ஒல்லாந்தர் ஆட்சியில் கடைப் பிடிக்கப்பட்டு வந்த நீதி நடைமுறைகளை பிரிட்டிசாரும் தொடர்ந்து கடைப்பிடித் தனர். தமிழரின் நிலப்பகுதிகளில் தேச வழமைச் சட்டத்துக்கமைய நீதி வழங்கப் பட்டது. தமிழரின் நிலப்பகுதிகட்குத் தனி நீதிப்பிரிவு இருந்தது.

## கோல்புறூக் ஆணைக் குழு (கி.பி. 1829)


நாட்டின் கரையோரப் பகுதிகளில் மட்டும் ஆட்சிசெய்த பிரிட்டிசார், கண்டி அரசு கைப்பற்றப்பட்டபின் தீவு முழுவதை யும் தமது ஆட்சிக்குள் கொண்டுவந்தனர். கண்டி அரசின் ஆட்சிமுறை வேறு; யாழ்ப் பாண அரசின் ஆட்சிமுறை வேறு; கோட்டை அரசின் ஆட்சிமுறை வேறு. வெவ்வேறு முறைகளால் ஆட்சிசெய்வதில் உள்ள குறை பாடுகளால் பிரிட்டிசார் துன்பப்பட்டனர். கண்டி அரசின்கீழ் இருந்த ஆட்சித் தலைவர் களின் உரிமை நீக்கப்படாததால், அவர்கள் தன்னிச்சையாக ஆட்சிசெய்யத் தொடங்கி னார்கள்.

கண்டியில் நடைபெற்ற புரட்சியும் (கி.பி. 1818) பிரிட்டிசாருக்கு மனநிறைவைத் தர வில்லை. எனவே, ஆட்சிமுறையைச் சீர் செய்வதற்கான ஓர் ஆணைக்குழு கி.பி. 1829-ல் அமைக்கப்பட்டது. **கோல்புறூக் ஆணைக் குழு** எனப் பெயர்பெற்ற இந்த ஆணைக்குழுவின் விதப்புரைகள் 1832-ல் அறிக்கையாக அளிக்கப்பட்டன.

கோல்புறூக் ஆணைக்குழுவின் அறிக்கை யுடன் இணைக்கப்பட்ட இலங்கையின் வரை படம் முக்கியமானது. இப்படத்தில் (படம் 6)

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net





படம் ஆறு: கோல்புறாக் ஆணைக்குழுவின் அறிக்கையுடன் இணைக்கப்பட்ட இலங்கைப் படம் (கி.பி. 1832)

இந்தப் படத்தில் கிழக்கு மாகாணத்தின் தெற்கெல்லையாகக் கும்புக்கன் ஆறும் மேற்கு **எல்லையாக** மாவலிகங்கையும் குறிப்பிடப்பட்டு, வேடர்கள் வதியும் விந்தனைக் காடு கிழக்கு **மாகாண** நிலப்பகுதிக்கு உரியதாகக் காட்டப்பட்டுள்ளது.

www.tamilarangam.net






[ From Putlam on the North Western to the River Komane on the South East side of the Island the Country is inhabited Principally by Malabars.

From the Chilaw River on the Western to the River Komane on the South Eastern side of the Island the Country is inhabited by the Singalese.]

படம் ஏழு: அலெக்சாண்டர் சோன்சுடன் 1-6-1799-ல் எழுதிய கைபெழுத்துக் குறிப்பு.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



இலங்கைத் தீவு ஐந்து மாகாணங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளது. கிழக்கு, வடக்கு, மேற்கு, தெற்கு, மத்திய மாகாணங்கள் என்னும் ஐந்தும் எல்லையிட்டுக் காட்டப் பட்டுள்ளன.

கிழக்கு மாகாணத்தின் மேற்கெல்லையாக மாவலிகங்கை காட்டப்பட்டுள்ளது. தெற் கெல்லையாகக் கும்புக்கன் ஆறு காட்டப் பட்டுள்ளது. வேடர்களின் வாழ்விடமாகிய விந்தனைப் பகுதி கிழக்கு மாகாணத்துடன் இணைக்கப்பட்டிருந்தது.

கோல்புறூக் ஆணைக்குழுவின் விதப்புரை கள் தமிழ் ஈழ நாட்டினத்துக்குப் பாதகமாக அமைந்தன. இரு வெவ்வேறு ஆட்சி மாவட் டங்களாக, நீதிப் பிரிவுகளாக ஆட்சிசெய்யப் பட்ட இலங்கைத் தீவு ஒரே ஆட்சியின்கீழ், ஒரே முறையான நீதிவழங்கல் முறையின்கீழ்க் கொண்டுவரப்படவேண்டும் எனக் கோல்புறூக் ஆணைக்குழு விதந்துரைத்தது. கி.பி. 1833 வரை தமிழ் நிலப்பகுதிகள் தனியாகவும், சிங்கள நிலப்பகுதிகள் தனியாகவும் ஆட்சி செய்யப்பட்டன. கோல்புறூக் ஆணைக்குழு வின் விதப்புரைகளைத் தொடர்ந்து, இந்த இரு நிலப்பகுதிகளின் ஆட்சியும் நீதி வழங்க லும் ஒரே ஆட்சியின்கீழ் வந்தன.

கி.பி. 1619 யூனில் தமிழ் ஈழ அரசின் இறைமை போர்த்துக்கேயரைச் சென்றடைந் தது. கி.பி. 1833-ல் தமிழ் ஈழ நிலப்பகுதிகள் சிங்கள நிலப்பகுதிகளுடன் பிரிட்டிசாரால் வலுக்கட்டாயமாக ஒன்றிணைக்கப்பட்டன.

## சிங்களப் பெரும்பான்மை ஆட்சி

கி.பி. 1833-லிருந்து 1948 பெப்புருவரி 3 வரை இந்த நடைமுறை தொடர்ந்தது. 1948 பெப்புருவரி 4ஆம் நாள் இலங்கைத் தீவு ஒற்றையாட்சி முறையின்கீழ் முழுமையான ஆட்சிப் பொறுப்பைப் பெற்றது. 1948-க்குப் பின்னர் ஒற்றையாட்சி அமைப்பில் சிங்களப் பெரும்பான்மை ஆட்சி, தமிழ் நிலப்பகுதி களைச் சிங்களக் குடியேற்றங்கள் மூலம் சிங்கள நிலப்பகுதிகளாக்க முயல்கின்றது. கிழக்கு மாகாணத்தின் எல்லைகள்கூட மாவலிகங்கை யிலிருந்து கிழக்குப் பக்கமாக நகர்த்தப் பட்டன.

www.tamilarangam.net

**நான்காவது**

# தமிழ் ஈழம் – நாட்டு எல்லைகள்

உலகில் நாடுகள் பல உள; நாட்டினங்கள் பல உள. ஒரே நாட்டில் பல நாட்டினங்கள் வாழ்கின்றன. இந்தியா ஒரு நாடு. அங்குப் பல நாட்டினங்கள் இணைந்து வாழ்கின்றன. சுவிட்சர்லாந்து ஒரு நாடு. அங்குப் பல நாட்டினங்கள் வாழ்கின்றன. சோவியத் ருசியா ஒரு நாடு. அங்குப் பல நாட்டினங்கள் வாழ்கின்றன.

ஒரு நாட்டினம் பல நாடுகளில் வாழ்வதும் உண்டு. அரேபியர் ஒரே நாட்டினத்தவர்; ஆனால், பல நாடுகளில் வாழ்கின்றனர். ஆங்கிலேயர் ஒரே நாட்டினத்தவர்; பல நாடுகளில் வாழ்கின்றனர். இசுபானியர் ஒரே நாட்டினத்தவர்; ஆனாலும், பல நாடுகளில் வாழ்கின்றனர்.

ஒரே நாட்டில் ஒரே நாட்டினம் வாழ்வதும் உண்டு. யப்பானிய நாட்டினம் யப்பானில் மட்டும் வாழ்கின்றது. பிற நாடுகளில் யப்பானியர் வாழ்ந்தாலும், கணிசமான தொகையாக வாழவில்லை. பிரஞ்சு நாட்டினம் பிரஞ்சு நாட்டில் வாழ்கின்றது. சீய நாட்டினம் சீயத்தில் மட்டுமே வாழ்கின்றது. பர்மிய நாட்டினம் பர்மாவில் மட்டுமே வாழ்கின்றது.

ஒரே நாட்டில் ஒன்றுக்கு மேற்பட்ட நாட்டினங்கள் வாழ்வதும், இவற்றுள் சிறுபான்மையினராக உள்ள நாட்டினம் பெரும்பான்மையினராக உள்ள நாட்டினத்தால் ஆளப்படுவதும் உண்டு.

இலங்கைத் தீவு ஒரே நாடாக இருப்பதும், சிங்களப் பெரும்பான்மை நாட்டினத்தின் ஆட்சி தமிழ் ஈழ நாட்டினத்தின்மீது நடாத்தப்படுவதும் கண்கூடு. கனடாவில் ஆங்கில நாட்டினம் பெரும்பான்மையாகவும், பிரஞ்சு நாட்டினம் சிறுபான்மையாகவும் இருப்பதனால், பிரஞ்சு நாட்டினம் பாதிப்புக்கு உள்ளாவதும் தெளிவு.

மலேசியாவில் மலாய் நாட்டினம் பெரும்பான்மையாகவும், சீன நாட்டினமும் தமிழ் நாட்டினமும் சிறுபான்மையாகவும் இருப்பதனால் மலாய் நாட்டினத்தின் பெரும்பான்மை ஆட்சி நடப்பதும் வெளிப்படை. சிறுபான்மை நாட்டினங்களாக நாடுகளில் வாழ்பவர் பாதிக்கப்பட்டு வருகின்றமைபற்றி ஐக்கிய நாடுகள் அவை கவனத்துக்கு எடுத்து வருகின்றது.

பெரும்பான்மை நாட்டினம், ஒரு நாட்டில் சிறுபான்மை நாட்டினத்தால் ஆட்சி செய்யப்பட்டு வருவதும் உலகில் நடைபெறுகின்றது. தென்னாப்பிரிக்காவில் நடைபெறும் வெள்ளையர் ஆட்சி இதற்குச் சான்று.

ஒரே நாட்டினம் தனி ஒரு நாடாகவோ, பல நாடுகளாகவோ, பல நாட்டினங்களுடன் ஒரு நாடாகவோ வாழ்ந்தாலும், அந்த நாட்டினத்துக்குத் தனியான நிலப்பகுதி இருக்குமேயானால், அந்த நாட்டினம் பிற நாட்டினங்களால் தொல்லைக்குள்ளாகும் காலங்களில் தனக்குரிய உரிமைகளை நிலைநாட்ட முடியும்.

பாகித்தான் நாட்டில் வங்காள நாட்டினம் துன்பத்துக்கு ஆளானபோது, தனியாகப் பிரிந்துசென்று வங்காளதேசம் என்னும்

www.tamilarangam.net



தன்னாட்சியும் இறைமையும் உள்ள நாடாக மூகிழ்த்தமைக்குக் காரணம் வங்க நாட்டினம் தனியான நிலப்பகுதியைக் கொண்டிருந்தமையே.

கனடாவிலுள்ள கியுபெக் மாகாணம், சிறுபான்மையினரான பிரஞ்சு நாட்டினத்தவரின் நிலப்பகுதியாக இருக்கின்றமையால், அவர்கள் நிலப்பகுதியின் அடிப்படையிலும் தம் உரிமைக் கோரிக்கைகளை அமைத்துள்ளனர்; கியுபெக் தனி நாடாக வேண்டும் எனக் கோருகின்றனர்.

பிரிட்டனில் உள்ள இசுக்கொட்டிசு நாட்டினத்தார், இசுக்கொட்லாந்து என்னும் தனியான நிலப்பகுதிக்கு உரிமையுடையவர் ஆதலால், பிரிந்து தனியாக வாழ விழைகின்றனர். ஐரிசு நாட்டினம் அயர்லாந்து என்னும் தனியான நிலப்பகுதியைக் கொண்டிருந்தமையால், பிரிட்டனிடமிருந்து பிரிந்து தனி நாட்டை அமைத்தது.

மலேசிய நாட்டிலுள்ள சீன நாட்டினமும் தமிழ் நாட்டினமும் சிறுபான்மை நாட்டினங்களாக இருந்தும், தனித்தனி நிலப்பகுதிகளைக் கொண்டிராமையால் பெரும்பான்மை நாட்டினமான மலாய் நாட்டினத்துடன் இணைந்து வாழவும், பிரிந்துபோகவும் முடியாத நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளன.

சிங்கப்பூர் தனியான நிலப்பகுதியாக இருந்தமையாலும் சீனரும் தமிழரும் அந்த நிலப்பகுதிக்குச் சொந்தம் கொண்டாடியமையாலும் மலேசியாவிலிருந்த சிங்கப்பூர் தனி நாடாகப் பிரிந்தது.

உலகின் நாடுகள், நாட்டினங்கள் அமைதியாக— சமாதானமாக வாழவேண்டுமானால், ஒவ்வொரு நாட்டினமும் தனக்குரிய தனியான நிலப்பகுதியைக் கொண்டிருக்க வேண்டும். அந்த நிலப்பகுதி வரையறுக்கப்பட்ட எல்லைகளைக் கொண்டதாக இருத்தல் வேண்டும். போர், ஆதிக்கவெறி காரணமாக ஆட்சி எல்லைகள், அரசு எல்லைகள் மாறினாலும், நாட்டினத்துக்குரிய நிலப்பகுதியின் எல்லைகள் மாறாதிருக்க வேண்டும்.

முன்னர்க் குறிப்பிட்டது போல, உலக நிலப்பரப்பின் அளவு மாறாமலிருக்கவும் மக்கள்தொகை பெருகிக்கொண்டு போகவும் எவ்வளவு நிலப்பகுதியைப் பெற்றுவிட முடியுமோ அவ்வளவையும் பெற்றுவிட வேண்டும் என நாட்டினங்கள் கருதும் காலம் வெகு தொலைவில் இல்லை. மாந்தனுக்கு இந்தச் சிந்தனை புதிய வாழ்வுமுறையைத் தரப்போகின்றது.

ஏற்கெனவே கூறியதுபோலத் தமிழ் ஈழ நாட்டினத்துக்கு இலங்கைத் தீவில் தனியான நிலப்பகுதிகள் உண்டு. தமிழ் ஈழ நாட்டினத்தினர் இந்த நிலப்பகுதியைப் பிறிதொரு நாட்டினத்திடமிருந்து கைப்பற்றியவர் அல்லர்; வழிமுறை வழிமுறையாகப் பல்லாயிரம் ஆண்டுகளினூடாக இந்த நிலப்பகுதிக்கு உரிமை கொண்டாடி வருகின்றனர். இந்த நிலப்பகுதியைக் கைவிட்டால் — பறிகொடுத்தால் — தமிழ் ஈழ நாட்டினம் உலகின் வேறெந்த நிலப்பரப்புக்கும் செல்ல முடியாது; உரிமை கோர முடியாது.

## கடல் எல்லைகள்

தமிழ் ஈழ நாட்டின நிலப்பகுதியின் ஒரு பக்க எல்லை கடலால் சூழப்பட்டுள்ளது. வங்காள விரிகுடாவின் அலைகள் தமிழ் ஈழ நிலப்பகுதியின் கிழக்கு, வடக்குக் கரையோரமெங்கும் வந்து மோதுகின்றன.

தென்கடல் எனப்படும் மன்னார் வளைகுடாவும் பாக்குத் தொடுவாய்க் கடலும் தமிழ் ஈழ நிலப்பகுதியின் மேற்கு எல்லைகள். தென்கடலும் பாக்குத் தொடுவாயும் தமிழ் ஈழப் பகுதியைத் தமிழ்நாட்டு நிலப்பகுதியிலிருந்து பிரிக்கின்றன.

தமிழ் ஈழ நாட்டையும் தமிழ்நாட்டையும் கடல் வேறாக்கினாலும், கடல் வளத்தைப் பயன்படுத்துவதில் எல்லைகள் அமைய வேண்டுமன்றோ? இந்த எல்லைகள் வரலாற்றுப் புகழ் பெற்றவை. முத்துக் குளிப்பு உரிமைகள் தொடர்பாகத் தென் கடல், தமிழ்நாட்டுக்கும் தமிழ் ஈழத்துக்குமிடையே பங்கிடப்பட்டது. இரு நாட்டு நில எல்லைகட்கிடையே உள்ள தொலைவின் இடை நடுவணாக உள்ள கற்பனைக் கோட்டின் அடிப்படையில், கடல் எல்லைகள் அமைந்துள்ளன.

www.tamilarangam.net



இதே முறைப்படி பாக்குத் தொடுவாயிலும் கடல் எல்லைகள் உண்டு. தமிழ் ஈழ நாட்டையொட்டி அமைந்துள்ள தீவுக் கூட்டங்கள் தமிழ் ஈழ நாட்டுக்குரியவையே. மண்டைத் தீவு, வேலணை, காரைத் தீவு, எழுவைத் தீவு, அனலைத் தீவு, நயினாத் தீவு, நெடுந்தீவு, பாலைத் தீவு, கச்சத் தீவு என்பன தமிழ் ஈழ நாட்டுக்குரிய நிலப் பகுதிகளே.

கடல் எல்லைகளைப் பொறுத்தவரையில் அனைத்துலக நாடுகளாலும் 'ஏற்றுக்கொள்ளப்பட்ட விதிமுறைகள் உண்டு.' ஒரு நாட்டின் கரையிலிருந்து முதல் 5 கி.மீ. தொலைவு வரை நாட்டுக்குரிய கடலாக ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. நாட்டின் சட்டங்களும் விதிகளும் இக் கடல் எல்லைக்குள்ளும் செல்லுபடியாகும். இந்த எல்லை கரையிலிருந்து 20 கி.மீ.வரை நீட்டிக்கப்பட்டு நாடுகளால் ஏற்றுக்கொள்ளப்பட்டது.

அண்மைக் காலங்களில் நாடுகள், தம் நிலத்திலுள்ள வளத்தைப் பயன்படுத்துவதுடன், தமது நிலத்தைச் சுற்றியுள்ள கடலின் வளத்தையும் பயன்படுத்தும் உரிமை தமக்கு இருக்கவேண்டும் என வலியுறுத்தி வந்துள்ளன. ஒரு நாட்டின் கடற்கரையிலிருந்து 320 கி.மீ. தொலைவு வரையிலும் உள்ள கடற் பகுதியின் வளங்கள் அந்த நாட்டுக்கே உரியவை என்னும் எண்ணம் வேரூன்றி வருகின்றது.

தமிழ் ஈழ நாட்டுக்கும் தமிழ்நாட்டுக்கும் இடைப்பட்ட கடல் எல்லைகள் தொடர்பாக அண்மையில் இலங்கை அரசும் இந்திய அரசும் மேற்கொண்ட உடன்படிக்கைகள் ஏற்றுக் கொள்ளக் கூடியவையே. தமிழ்நாட்டிலுள்ளோர் கச்சத் தீவு தமிழ்நாட்டுக்குச் சொந்தமான நிலப்பகுதி என உரிமை கோரியதையும், அதனால் தமிழ்நாட்டவர் கச்சத் தீவுக்கு வழமையான பயணக் கட்டுப்பாடுகளுக்கு அப்பால் வந்துபோவதற்கு வழிசெய்யப்பட்டதையும் இங்குக் குறிப்பிட வேண்டும்.

தமிழ் ஈழ நாட்டினத்தின் நிலப்பகுதியை ஒட்டிய கடலைப் பொறுத்தவரையில் தமிழ் ஈழ நாட்டுக்கும் தமிழ்நாட்டுக்கும் இடைப்பட்ட கடல் எல்லைகளை அமைத்துள்ளமையால், ஏற்றுக்கொள்ளப்பட்ட எல்லைகள் தாம் அறுதியானவை. எனினும் வங்காள விரிகுடாவில், தமிழ் ஈழ நிலப்பகுதியின் கடற்கரையிலிருந்து 320 கி.மீ. தொலைவுவரை உள்ள கடல்வளங்கள் தமிழ் ஈழ மக்களுக்கு உரியவை என்பதில் கருத்துவேறுபாடு இருக்க முடியாது. தமிழ் ஈழ நிலப்பகுதியின் கிழக்குக் கரையோரப் பகுதிகளிலிருந்து கடலுள் 320 கி.மீ.வரை உள்ள கடல்வளத்தை மீன்வளமாய் இருந்தாலென், பெற்றோலிய வளமாய் இருந்தாலென், கனிப்பொருள் வளமாய் இருந்தாலென்? அவற்றைப் பயன்படுத்தும் உரிமை தமிழ் ஈழ மக்களுடையதாகும். தமிழ் ஈழ மக்களின் ஒப்புதலின்றி இந்த வளத்தை வேறு எந்த நாடோ, நாட்டினமோ கொள்ளக் கூடாது.


## நாட்டின் எல்லைகள்

இலங்கைத் தீவின் நிலப்பரப்பில் ஆண்டாண்டு காலமாகத் தமிழர் எங்கெங்கு வாழ்ந்தனர் எனக் கூறுவது எளிது. தமிழர்தாம் இத் தீவின் பழங்குடிகள் என்பதையும், சிங்களவரின் முன்னோரான விசயனும் அவன் கூட்டாளிகளும் இத் தீவின் வந்தேறு குடிகள் என்பதையும் முன்னர்க் கூறினோம்.

படிப்படியாகத் தமிழர் தங்கள் வாழ்விடங்களாகக் கரையோர நிலப்பகுதிகளை உரியதாக்கிக் கொண்டனர். சிங்களவர் தீவின் நடுப்பகுதியையும் தெற்குப் பகுதியையும் தமதாக்கிக் கொண்டனர்.

இவ்வாறு தீவின் வெவ்வேறு நிலப்பகுதிகளைத் தமதாக்கிக்கொண்ட இரு நாட்டினங்களின் நிலப்பகுதிகளின் எல்லைகள் எவையாக இருக்கும்? நிலப்பரப்பின் எல்லைகளை வகுக்கும்பொழுது மலை, ஆறு, கடற்கரை போன்ற இயற்கையான நில அமைப்புகளை எல்லையாகக் கொள்வது இன்றைய மரபு மட்டுமன்று பண்டைய மரபுங்கூட. வட வேங்கட மலைதான் தமிழ்கூறும் நல்லுலகின் வடக்கெல்லை எனவும், கடலைத் தொட்டு நிற்கும் குமரிமுனைக் கடற்கரைதான் தெற்கெல்லை எனவும் 3000 ஆண்டுகட்கு முன்னர் வாழ்ந்த தொல்காப்பியர் இயற்றிய தொல்காப்பியத்துக்குச் சிறப்புப் பாயிரம் தந்த பனம்பாரனார் என்னும் தமிழ்ச்சான்றோர்,

www.tamilarangam.net




படம் எட்டு: தமிழ் ஈழம் - கடல் எல்லைகள்

தமிழ்நாட்டுக்கும் தமிழ் ஈழத்துக்கும் உள்ள கடல் எல்லைகள், தமிழ் ஈழத்தின் மரபுவழி உரிமையான முத்துக்குளிப்பு உரிமை எல்லைகள், வங்காள விரிகுடாவில் உள்ள கடல்வள வலைய எல்லைகள் இங்குத் தரப்பட்டுள்ளன.

www.tamilarangam.net



*''வடவேங்கடம் தென்குமரி
ஆயிடைத்
தமிழ்கூறும் நல்லுலகம்''*

னக் கூறியுள்ளார். நிலப்பரப்பைப் பகிர்ந்து காள்ளும் நாடுகள் இன்றுங்கூட, இயற்கை மைப்புகளை முன்னர்த்தேடுகின்றன; பின் ர்தான் வேறு காரணிகளைத் தேடுகின்றன.

இலங்கைத் தீவில் தமிழரின் வாழ்விடங் ளில் குறிஞ்சிநிலம் மிகக் குறைவு; தரவை வளிப் பாங்கான நிலமே அதிகம். தரவை வளிப் பாங்கான நிலத்தில் ஆறுகள் குளங்கள் ள்ளன; கடற்கரை உண்டு. கடற்கரைகள் ல்லையாக அமைவதை ஏற்கெனவே பார்த் தாம்; கிழக்குக் கரையோரம், வடக்குக் ரையோரம், மேற்குக் கரையோரம் என ன்று திசைகளிலும் உள்ள கரையோரங் ளையும், கடலுக்குள் உள்ள ஆதிக்க எல்லை, ல்வள எல்லை என்பவற்றையும் நோக்கி னாம்.

நிலப்பகுதியில் உள்ள இயற்கை எல்லை ளான ஆறுகளும் குளங்களுந்தாம், தமிழர் ாழ்விடங்களைச் சிங்களவரின் வாழ்விடங் ளிலிருந்து பிரிக்க முடியும். மேலைநாட்டவர் லர், மேலெழுந்த வாரியாகத் தமிழர் வாழ் ட எல்லைகளைக் குறிப்பிடும்பொழுது ஆறு ளையே எல்லைகளாகக் குறிப்பிட்டுள்ளனர் ன்பதைப் பார்த்தோம்.

தமிழர் வாழ்விடங்களும் சிங்களவரின் ாழ்விடங்களும் ஆறுகளை அடிப்படையாகக் காண்டே எல்லை வகுக்கப்பட்டன. இந்த ல்லைகள் இன்று நேற்றல்ல, மிகப் பழங் ாலந் தொட்டு இருந்துவந்துள்ளன. சில ாலங்களில் இந்த எல்லைகளிற் சிறுசிறு மாற் ங்கள் ஏற்பட்டிருக்கலாம். சோழர் காலத் ன் தலைநகரம் பொலனறுவையில் அமைந் ருந்தது. மாகனின் தலைநகரமும் பொல றுவையே. இந்த மாற்றங்கள் வழிவழித் மிழ்நிலப் பகுதிகளில், அவற்றின் எல்லை ளில் அடிப்படை மாற்றங்களைக் கொண்டு ரவில்லை.

கும்புக்கன் ஆறுதான் தமிழ்ப் பகுதியின் தற்கெல்லையாக அமைகின்றது. பிரிட்டி ார் ஆட்சியில் கிளெக்கோர்ண், வளவை கங்கைவரை தமிழர் வாழ்ந்ததாகக் குறிப் பிட்டுள்ளார். மாணிக்ககங்கைக் கரையில் தமிழரின் வழிபாட்டிடமான கதிர்காமம் உள்ளது. ஆதிக்க எல்லையாகக் கொண்டால் கும்புக்கன் ஆற்றையே தமிழ் ஈழ நிலப்பகுதி யின் தெற்கெல்லையாகக் கொள்ளவேண்டும். கும்புக்கன் ஆற்றின் வடக்குக் கிளை, அதன் தொடக்க நிலையிலிருந்து ஏனைய கிளை களுடன் கடலில் கலக்கும்வரை தமிழர் வாழ் விடத்தின் தெற்கெல்லையாக அமைகின்றது.

கல்லோயா ஆற்றின் தொடக்கத்திலுள்ள கிளைகளில், தமிழ் ஈழத்தின் எல்லைக்கோடு தொடர்கின்றது.

கிழக்குக் கரையோரத்தில் உள்ள தமிழர் வாழ்விடங்களின் மேற்கெல்லையாக மாவலி கங்கையாறு அமைந்துள்ளது. தமிழ் ஈழ நிலப்பகுதியின் எல்லைக்கோடு கும்புக்கன் ஆற்றில் தொடங்கிக் கல்லோயா ஆற்றின் தொடக்கக் கிளைகளினூடாக வந்து, மாவலி கங்கையின் கிழக்குக் கிளையின் தொடக் கத்தை அடைந்து, மாவலிகங்கையினருகாக வடக்குநோக்கிச் செல்கின்றது.

இன்றைய கிழக்கு மாகாண எல்லைகள் ஆட்சி வசதிக்காக — ஆட்சியின் எளிமை கருதி — எழுந்தவையாகும். பழுகாம வன்னி மையின் ஆட்சிக் காலத்தில் விந்தனைப்பகுதி, தமிழர் வாழ்விடமாக இருந்தது. அங்கு வாழ்ந்த வேடர்களின் தலைவர்கள் பழுகாம வன்னிமைக்குத் திறைசெலுத்தி வந்தார்கள். வேடர்கள் தமிழ்மொழியைப் பேசினார்கள். இன்றைய கிழக்கு மாகாண எல்லைகள் விந்தனைப் பகுதியைக் கிழக்கு மாகாணத்துக் குள் உள்ளடக்கவில்லை. தமிழர் நிலப்பகுதி யின் இயற்கையான எல்லை மாவலிகங்கையே; இன்றைய எல்லைகள் அல்ல.

*1833*-ல் எழுந்த கோல்புறூக் ஆணைக் குழுவின் விதப்புரைகளை நோக்குவோர், கோல்புறூக் வரைபடத்தில் மாவலிகங்கை கிழக்கு மாகாண எல்லையாக விதந்துரைக்கப் பட்டதைக் காணலாம்.

மாவலிகங்கையானது தெற்கே கல் லோயா ஆற்றிலிருந்து தொடரும் தமிழ்ஈழ எல்லைக்கோட்டை எடுத்து, கந்தளாய்க்

www.tamilarangam.net



குளம்வரை கொண்டுசெல்கின்றது. மாவலி கங்கை விடுகின்ற எல்லைக்கோடு கந்தளாய் ஆற்றில் தொடர்ந்து சென்று, யான்ஓயா வினைச் சென்றடைகின்றது. யான்ஓயாவின் கிழக்குக் கிளையாறு வழியாகத் தொடர்கின்ற எல்லைக்கோடு, கிழக்குக் கிளையும் மேற்குக் கிளையும் சந்திக்கும் இடத்தில் திரும்பி, மேற்குக் கிளை வழியாகத் தொடர்கின்றது.

யான்ஓயாவிலிருந்து பாவற்குளம்வரை, ஆற்றுப்படுக்கை இல்லாத எல்லை அமைகின்றது. யான்ஓயாவின் மேற்குக் கிளை தொடங்குமிடத்திலிருந்து பாவற்குளத்தை ஒட்டிய அருவியாற்றுக் கிளைவரையுள்ள நேர்கோடு தமிழ் ஈழ எல்லையாகும். வவுனியாவிற்கும் மதவாச்சிக்கும் இடைப்பட்ட இந்த எல்லை, இன்றுள்ள வடமாகாண, வடமத்திய மாகாண எல்லையாகும். வரலாற்றுச் சிறப்புடைய இந்த எல்லை ஏற்றுக்கொள்ளக் கூடியதே.

பாவற்குளத்திலிருந்து அருவியாற்றுக் கிளைகளின் சந்திப்பிலுள்ள குளக்கரைக்குச் செல்லும் நேர்கோடு, அங்கிருந்து மோதரகம் ஆற்றின் தென்கிளையும் வடகிளையும் சந்திப்புக்குச் செல்லும் நேர்கோடு என்பன தமிழீழ எல்லைக்கோட்டைத் தாங்கிச் செல்கின்றன.

மோதரகம் ஆற்றின் தென்கிளை வழியாகத் தொடரும் எல்லைக்கோடு, கலாஓயாவின் கிளையாறு ஒன்றினூடாகத் தொடர்கிறது.

புத்தளம் மாவட்டத்தின் இன்றைய எல்லைக்கோடு, தமிழ் ஈழ நிலப்பகுதியின் மேற்குக் கரையோர நிலப்பகுதியினைச் சிங்கள நாட்டின் நிலப்பகுதியிலிருந்து பிரிப்பதாகக் கருதலாம். வாய்க்கால் ஆறு எனப்படும் மாஓயா வரை தமிழ் ஈழ நிலப்பகுதி பரந்துள்ளதை இந்த எல்லைக்கோடு காட்டுகின்றது. புத்தளம் மாவட்டத்தில் தமிழர் பெருமளவில் வாழ்ந்தமையும், அங்குத் தமிழரின் நீதிமுறை வழமையில் இருந்தமையும் வரலாற்றுச் சான்றுகள் பலவற்றால் முன்பு விவரிக்கப்பட்டுள்ளன. எனவே, இன்றைய புத்தளம் மாவட்டக் கிழக்கு எல்லைக்கோட்டைத் தமிழ் ஈழ நிலப்பகுதியின் எல்லைக்கோட்டின் தொடர்ச்சியாகக் கொள்ளலாம்.

கும்புக்கன் ஆற்றிலிருந்து தொடங்கிக் கல்லோயா, மாவலிகங்கை, கந்தளாய் ஆறு, யான்ஓயா, அருவியாறு, மோதரகம் ஆறு, கலாஓயா ஆகிய ஆறுகளின் கரையோரமாக வரும் தமிழ் ஈழ எல்லைக்கோடு, புத்தளம் மாவட்ட எல்லைக்கோட்டுடன் தொடர்ந்து வாய்க்கால் ஆற்றின் கரையோரமாகச் சென்று நிறைவுபெறுகின்றது.

சிங்களவர் வாழ்விடங்களிலிருந்து தமிழர் வாழ்விடங்களைப் பிரிக்கின்ற நிலப்பகுதியின் எல்லைக்கோடு இயற்கையான எல்லைகளைக் கொண்டதாகும்; வரலாற்று எல்லைகளைக் குறிப்பதாகும். 1833ஆம் ஆண்டுக்குப் பின்னரும், சிறப்பாக 1948 ஆம் ஆண்டுக்குப் பின்னர், தமிழர் நிலப்பகுதியின் தமிழ்த் தன்மை மறைந்துகொண்டு வருகிறது. 1948-க்குப் பின்னர்த் தமிழரின் நிலப்பகுதிகளில் சிங்கள மக்கள் பரவலாகக் குடியேறி வருகின்றனர் — குடியேற்றப்பட்டு வருகின்றனர் (படம் 9).

தமிழர் இருந்த பல குடியிருப்புகள் சிங்கள மயமாக்கப்பட்டுவிட்டன. ஒரு தலைமுறைக்கு முன்புவரை தமிழ் பேசிய பல குடும்பங்கள், சிறப்பாக எல்லைக்கோட்டின் அருகில் உள்ள தமிழர், இன்று கலப்புமணத்தாலும் சிங்களமய மயக்கத்தாலும் சிங்களவர் ஆகியுள்ளனர். சிங்களப் பெரும்பான்மை ஆட்சியும், அரசியல் ஆதிக்கமும், உடந்தையும் இதற்குக் காரணமாகும்.


இதனால், அருமருந்தன்ன தமிழரின் நிலப்பகுதிகளைத் தாரைவார்த்துக் கொடுத்துவிட முடியாது. வரலாற்றினூடாகத் தமிழர் வாழ்ந்த நிலப்பகுதிகள் தமிழ் ஈழ நாட்டினத்தின் உரிமைச் சொத்து. இந்த நிலப்பகுதிகளில் அண்மைக்கால அரசியல் ஆதிக்கத்தினால் ஏற்பட்ட இடைக்கால மாறுதல்கள், தமிழரின் வழிவழி உரிமைகளை, உரிமைச் சொத்துகளை, முன்னோர் வழிவழி வாழ்விடங்களைப் பறிகொடுக்க வகைசெய்யக் கூடாது.

தமிழ் ஈழ நிலப்பகுதி தமிழ் ஈழ நாட்டினத்தின் உரிமைச் சொத்து. உலகின் வேறெந்த நிலப்பகுதியிலும் தமிழ் ஈழ நாட்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net






டம் ஒன்பது: தமிழ் ஈழத்தில் சிங்கள அரசின் திட்டமிட்ட சிங்களக் குடியேற்றம்

உரிமை கொண்டாட — சொந்தம் ட்ட — முடியாது. அதுபோலத்தான் ஈழ நாட்டினத்தின் நிலப்பகுதியில் ந்த நாட்டினமும் சொந்தம் பாராட்டி கொண்டாட முடியாது.

லகின் மொத்த நிலப்பரப்பு மாறாமல் ின்றது. மக்கள்தொகை பெருகிக் டே போகிறது. நில நெருக்கடிதான் னின் முக்கியச் சிக்கலாகப் போகின் இந்த நிலையில் தமிழர் வாழ்விடங்கள் ப் பாதுகாக்கப்பட வேண்டும்.

தமிழ் ஈழ நாட்டினம், தனது நிலப் பகுதியைப் பேணவேண்டும்; பயனுறுத்த வேண்டும்; பாதுகாக்க வேண்டும். இதற் கெல்லாம் வழிசெய்யும் ஆட்சியுரிமை தமிழ் ஈழ நாட்டினத்திடம் இன்று இல்லை. ஆட்சி யுரிமை உண்டெனின், இல்லையெனின், தமிழர் இலங்கைத் தீவில் தமக்கென உரிய நிலப்பகுதியைச் சரியாகத் தெரிந்து பேண, பயன்படுத்த, பாதுகாக்க, அதன்மூலம் தம் வாழ்வியல் நோக்கங்களை நிறைவுசெய்ய இடையறா முயற்சி செய்யவேண்டும்.

''பெற்ற தாயும் பிறந்தபொன் னாடும்
நற்றவ வானினும் நனிசிறந் தனவே.''

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# உசாத்துணை


இளங்கோவடிகள், சிலப்பதிகாரம் *(1955)*, உ.வே.சா. பதிப்பு.

சங்க இலக்கியம் — பாட்டும் தொகையும், பதிப்பாசிரியர் எஸ். வையாபுரிப்பிள்ளை, 1967 பதிப்பு, பக். 1 — 808, பாரி நிலையம், சென்னை.

சத்தியநாதய்யர், ஆர்., பாலசுப்பிரமணியம், டி., இந்திய வரலாறு 2 ஆம் பாகம் — இடைக்கால இந்தியா *(1200 — 1707)* *(1960)*, பக். 1 — 538, அண்ணாமலைப் பல்கலைக்கழகம், சிதம்பரம்.

திருவள்ளுவர், திருக்குறள் தெளிவுரை *(1949)*, டாக்டர் மு. வரதராசன், பக். 1 — 291, தென் இந்திய சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம் லிமிட்டெட், சென்னை.

தொல்காப்பியர், தொல்காப்பியம், புலியூர்க் கேசிகன் தெளிவுரை *(1961)*, பக். 1—461, பாரி நிலையம், சென்னை.

திருச்செல்வம், மு., ஈழத் தமிழர் இறைமை *(1977)*, பக். 1 — 95, கொழும்பு.

Bechert, H., *Ceylon Journal of Historical and Social Studies*, Vol. 6 (1963), Colombo.

Brohier, R. L., *Ancient Irrigation*, Part 3 (1929), Ceylon Govt. Press, Colombo.

De Silva, K.M., *Ceylon Historical Journal*, Vol. 10 (1960).

Dharmaratna Thero, *Buddhism in South India*.

Ellawala, H., *Social History of Ceylon* (1969), Dept. of Cultural Affairs, Govt. Printing Press, Colombo.

Frike, C. & C. Schewitzer, *A Relation of Two Sev eral Voyages made into the East Indies* (1700), D. Brown and Others, London.

Gieger, W., *Cultural of Ceylon Mediaeval Times*, Ed. (1960), Heinz Berchert, Weisbaden Otto Hanassoivitz.

Harichandra, *Sacred City, Anuradhapura*.

Husain Mahdi, *The Rehla of Ibn Battuta* (1953), Translation and Commentary, Oriental Institute, Baroda.

Knox, Robert, *A Historical Relation of Ceylon*.

Malalasekara, G.P., *Pali Literature*.

Mendis, G. C., *The Early History of Ceylon* (1948), Y.M.C.A., Publishing House, Calcutta.

Mendies, G. C., *The Colebrooke Cameron Papers*, Documents on British Colonial Policy of Ceylon, Vol. I & II (1956), pp.1 — 393 & pp. 1 — 406, Oxford University Press, London.

Mendies, G.C., *Ceylon — Today and Yesterday*, pp. 1 — 146, Associated News Papers of Ceylon Ltd., Colombo.

Natarajah, T., *The Legal Systems of Ceylon in its Historical Setting* (1972), pp. 1 — 306, E. J. Brill, Leiden, Netherlands.

Neil, *Ethnology of Ceylon*, J.R.A.S.C.B., Vol. 12(4) (1892), Colombo.

Paranavitana, S., *Art and Culture of the Sinhalese*.

Pathmanathan, Dr. S., *Personal Communication* (1977).

Perera, B. J., *Ports of Ancient Ceylon*, Historical Journal, Vol. I (1963), Colombo.

Perera, S. G., *A History for Ceylon School*, Pt. I & II, Associated News Papers of Ceylon Ltd., Colombo.

Pieries, P.E., *R.H.S.C.B.*, Vol. 28(72), (1919), Colombo.

Pieries, R., *Sinhalese Social Organisation* (1956), The Ceylon University Press Board, Colombo.

Pieries, R., *Administration of Justice and Revenue in the Island of Ceylon under the Dutch Govt.*, The Clegorn Minute, J.R.A.S., New Series, Vol. III, Pt. II (1954), pp. 125 — 151.

Raghavan, M. D., *India in Ceylonese History — Society and Culture* (1964), Asia Publishing House, Bombay.

Sinnatamby, J. R., *Ceylon in Ptolemy's Geography* (1968), Colombo.

Sinnatamby, J. R., *Ceylon in Retrospect* (1972), Typescript, Available in Public Library, Jaffna.

Sinnatamby, J. R., *Tamilnadu of Ceylon* (1975), Monograph, Available in Public Libraries in Jaffna & Batticaloa.

Sinnatamby, J. R., *Kolkie*, Vol. 2. Institute of Tamil Studies, Madras,

Sinnatamby, J.R., *Pandyans* (1973), *Ibid*, Vol.3.

Sinnatamby, J.R., *An Etymological Study* (1965), *Ibid*, Vol. 6.

Stavrianos, L. S., *A Global History of Man* (1962), pp. 1 — 776, Allyn & Bocan Inc., Boston.

Tennent, J. E., *Ceylon — An Account of the Island* (1859), Longman Green, Britain.

Turner, L.J.B., Collected Papers on the History of Maritime Provinces of Ceylon, 1795 — 1805 (1923), Times of Ceylon Co. Ltd., Colombo.

Velupillai, A., *Ceylon Tamil Inscriptions* (1971), Colombo.

Wolpert, S., *India* (1965), Englewood Cliffs N.J. Prentice Hall.


தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# சுட்டி


கநானூறு 7
கவாழ்வு 2,3
ப்பூதியடிகள் 8
பயகிரி விகாரம் 7
மெய்ன்சு ஒப்பந்தம் 22
யர்லாந்து 4,30
ரப்பா 6,7
ரிச்சந்திரா 7
ரும்பொருட்காப்பகம் 24
ரேபியர் 1,3,4,7,28
ரோசிமித் 20
னுராதபுரம் 7,10,11,15
ங்கிலேயர் 28
திதிராவிடர் 6
ரியச் சக்கரவர்த்திகள் 11,
12,14,15
ரியர் 6
ங்கிலாந்து 4
சுக்கொட்லாந்து 4,30
சுபானியர் 28
சுலாமியர் 4
ந்தியா 28
பன் பற்றுற்றா 11,12
ராச இராச சோழன் 10
ராசேந்திர சோழன் 10
லிங்க வழிபாடு 7
ளங்கோவடிகள் 1
றைமை 20,27,30
ழத்தவர் 4
ழத்துப் பூதன்தேவனார் 7
ரோகணம் 8,10
சுக்கிமோ 1
ல்லாளன் 7,11
க்கிய நாடுகள் அவை 28
ரிசு 4,30
ல்லாந்தர் 15,16,18,20,
22,24
ற்றையாட்சி முறை 27
லாடிகள் 12
திர்காமம் 7,12
றுப்புநிற மக்கள் 4
னடா 28
ப்பிலி 3
ால்டுவெல் 8
புபெக் 30
ழக்கிந்தியக் கம்பனி 22
ளெக்கோர்ண் 22,32
றிஞ்சி 1,2,32
றுந்தொகை 7
து முனிவர் 7

கைலாய வன்னியன் 15,16,
18
கோல்புறூக் ஆணைக்குழு
24,27,32
சங்கம் 7
சங்கிலி மன்னன் 14
சங்குக்குளிப்பு 11
சந்திரபானு 11
சந்திரமௌலீசுவரர் கோயில்
7,8
சயங்கொண்ட சோழ
மூவேந்த வேளாளர் 10
சாலிகே, சாலியூர் 8
சிங்களவர் 7,11,16,31,32,
33
சிவனொளிபாதமலை 7,8,11
சிறீ விக்கிரம ராச சிங்கன் 22
சிறுத்தொண்டர் 8
சீயம் 28
சீனர் 3
சுந்தரமூர்த்தி 8,10
சுவிட்சர்லாந்து 28
சுவைட்சர் கிறித்தோபர் 16
சேரர் 4
சோகுன் 4
சோழர் 4,10,32
சோகன்சு சைமன்சு 20
சோன்சுடன் அலெக்சாண்டர்
24
தப்ரபேன் 8
தமிழர் 1,4,5,7, 8, 10, 11,
12, 15, 18, 20, 22, 24,
30,32,33,34
தாமிரபரணி 8
தாமிரிகே 8
தாலமி 7,8
திராவிட மக்கள் 3,6,7
திருஞானசம்பந்தர் 8,10
திருநாவுக்கரசு 8
துட்டகைமுனு 7
தேவதாசி 12
தேவாரம் 10
தேவேந்திரமுனை 7,8,11,12
தொல்காப்பியம் 31
நகர்சார் நாகரிகம் 6
நடராசா, பேராசிரியர் 19
நற்றிணை 7
நாகர்கள் 6
நாட்டினங்கள் 3,4,5,16,18,
20,22,28,30,31

நாட்டு வழமை 20,24
நாம் தமிழர் 4
நாயன்மார் 8
நிக்காய சங்கிரகம் 11
நீர்கொழும்பு 10,11,16
நெய்தல் 1
நோர்த், ஆளுநர் 22
பட்டினம் 8
படிமுறை வளர்ச்சி 3,4
பரதகுலம் 11
பல்லவர் 4
பழங்குடிகள் 6
பனம்பாரனார் 31
பாக்கித்தான் 28
பாண்டிய இளவரசி 6
பாண்டியர் 4
பாலை 1
பிரஞ்சுப் புரட்சி 4
பிராமணர் 12
பிரிட்டன் 4
பிரிட்டிசார் 20,22,24,27
புறவாழ்வு 2,3
பெரோன் சே.டியு 19
பொலனறுவை 10,11,32
போர்த்துக்கேயர் 12,14,15,
22,27
மருதம் 1,2
மலலசேகர 7
மலாய் மக்கள் 3
மாகன் 11
மாதோட்டம் 7,8,10
மாவமிசம் 6
முத்துக்குளிப்பு 10,11
முல்லை 1
மெயிட்லாந்து, தாமசு 24
மொகஞ்சதாரோ 6
யப்பான் 4,28
யாகபூசை 11
ரேலண்ட், அட்றியன் 16
வந்தேறு குடிகள் 6,31
வாசுக்கொட காமா 14
விசயன் 6,7,31
வெள்ளைநிறமக்கள் 3,4
வேடர்கள் 12,27,32
வேல்சு 4
றொபெட் நொக்சு 15,16
றோயல் ஏசியாடிக் கழகம் 24
யவனர் 7


தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்